
முகமில்லா மாயாவி!
லயன்
காமிக்ஸ்



# ஹாட் - லைன்!

வாசக நண்பர்களே!

அனைவருக்கும் எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள்! பத்தாவது வயதினை நெருங்கிக் கொண்டிருக்கும் நமது லயன் காமிக்ஸிற்கு இந்த ஆண்டு ஒரு land mark year ஆக அமைய வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் புது வருஷத்திற்குள் அடியெடுத்து வைக்கிறோம்!

முதலில் இனிப்பான விஷயத்தோடு ஆரம்பிக்கலாமா...? அடுத்த பக்கத்தைப் புரட்டினீர்களானல் நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த **லயன் 100வது இதழ்** பற்றிய முழு விபரங்களையும் பார்க்கலாம்! **"லயன் சென்சுவரி ஸ்பெஷல்"** என்ற பெயருடன் **ரூ. 20/- விலையில் மே 1ம் தேதி இதழ்** அட்டகாசமாய் வெளிவரும். உங்கள் அபிமான நாயகர்களான டெக்ஸ் வில்லர், காமெடி கௌ-பாய் லக்கி லூக், ஜேம்ஸ் பாண்ட் 007, சூப்பர் ஹீரோ ஸ்பைடர், சி.ஐ.டி. ஜானி நீரோ & ஸ்டெல்லா, சூப்பர் - ரிப்போர்டர் ஜானி, இரும்பு மனிதன் ஆர்ச்சி என்று ஒரு பயங்கரமான Star cast சாகஸம் செய்யத் தயாராகிக் கொண்டிருக்கிறது!

பெரும்பாலான வாசகர்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து இந்த நாயகர்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம்!

சூப்பர் ஹீரோ பிரியர்களுக்கென ஸ்பைடர் & ஆர்ச்சி கதைகள்

வெஸ்டர்ன் கௌ-பாய் கதை ரசிகர்களுக்காக டெக்ஸ் வில்லர்

நல்ல துப்பறியும் கதை ரசிகர்களுக்காக ஜேம்ஸ் பாண்ட் 007, ஜானி நீரோ, ரிப்போர்டர் ஜானி கதைகள் -

காமெடிக்காக கலரில் லக்கி லூக் சாகஸம் -

என்று முடிந்தளவிற்கு variety புகுத்தியுள்ளோம். கதாநாயகப் பட்டாளத்தைப் பற்றிய உங்கள் அபிப்ராயத்தை எதிர்பார்க்கிறேன்! வழக்கம் போல் கதைச் சுருக்கம் அடங்கிய folder தயாராகிக் கொண்டிருக்கிறது! முன் கூட்டியே இதழுக்குப் பதிவு செய்து கொள்ளத் தேவையான கூப்பன் & கதைச் சுருக்கம் கேட்டு எழுதியனுப்புங்கள் - உடனே அனுப்புகிறோம்!

**"லயன் சென்சுவரி ஸ்பெஷலுடன்"** ஒரு மிக மிக வித்தியாசமான இலவச இணைப்பும் உண்டு. அது என்னவென்பதை மே மாதம் தெரிந்து கொள்வீர்கள்!

சரி, இனி இம்மாதக் கதைக்கு வருவோமா? மின்னல் படையினரின் இந்த **முழு நீள சாகஸம்** நிச்சயம் ஒரு ஆங்கிலப் படத்தைப் பார்த்த திருப்தியினை ஏற்படுத்தும்! கதையைப் பற்றிய உங்கள் கருத்தை மறக்காமல் தெரியப்படுத்துங்களேன்!

அடுத்த மாதம் ரிப் கெர்பி **"வேங்கை வேட்டை"**க்குக் கிளம்புகிறார். பிரமாதமான சித்திரங்கள் இந்தக் கதைக்கு ஒரு highlight.

அப்புறம் - இம்மாத இதழின் நடுப்பக்கத்தில் ஒரு Questionaire உள்ளது. நமது இதழின் நிறைகுறைகளை தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகவே இந்தப் படிவம். பொறுமையாகப் படித்து உங்கள் பதில்களை எழுதி அனுப்புங்கள்! நமது லயனின் தரத்தை இன்னும் உயர்த்த உங்களது இந்த ஒத்துழைப்பை மிகவும் எதிர்பார்க்கிறேன்!

அட்வான்ஸ் பொங்கல் வாழ்த்துக்கள்!

அன்புடன்,

[signature]



பிரமாண்டமாய் வருகிறது!
லயன் காமிக்ஸ்
லயன் சென்சுரி ஸ்பெஷல்!
100-வது வெளியீடு
300 பக்க காமிக்ஸ் புதையல்!
விலை ரூ. 20/-
டெக்ஸ் வில்லர் தோன்றும்
பலி கேட்ட புலிகள்!
டுமில்!
காமெடி கௌபாய் லக்கி லூக் தோன்றும்
ஒரு ப்யானோவின் கதை!
மற்ற விபரங்



ஜேம்ஸ்பாண்ட் 007 துப்பறியும் —
மரண வியாபாரி!
புத்தம் புதிய சாகஸம்! சூப்பர் சித்திரங்கள்!
ரிப்போர்டர் ஜானி துப்பறியும்
காற்றில் கரைந்த கொலையாளி!


ஜானி நீரோ & ஸ்டெல்லா தோன்றும்
பற்றி எரியும் பாரிஸ்!
சூப்பர் ஹீரோ ஸ்பைடர்!
ஆர்ட்டிக்கில் ஆர்ச்சி!
மினி சாகஸம்!
ப்ளஸ் ஒரு சஸ்பென்ஸ் இலவச இணைப்பு




பிரிட்டிஷ் இராணுவ தலைமையகத்தில் புல்லுருவி ஒருவன் ஜெர்மானியரின் கையாளாக செயல்பட்டு வந்ததால் அவர்களுடைய இரகசிய திட்டங்களை எதிரிகள் முன் கூட்டியே தெரிந்து கொள்ள முடிந்தது. இந்த விபரீதமான பின்னணியில், மேலிடத்து உத்தரவின்படி 'மின்னல்படை' என்று பெருமையாக பேசப்பட்ட அதிரடிப்படை வீரர்களை யுத்த களத்திற்கு வழி நடத்திச் சென்ற காப்டன் மாத்யூஸ், எதிரிகள் விரிந்திருந்த வலையில் வீழ்ந்து, அல்லல் பட்டு- அப்பப்பா.... எப்படிப்பட்ட பயங்கர அனுபவம் அது!


இருள் போர்த்துக் கிடந்த இத்தாலிய கடற்கரையை தங் களுடைய படகு சமீபித்துவிட்ட வேளையில் அஞ்சா நெஞ்சம் படைத்த அந்த மின்னல் படை வீரர்களிடம் கூட ஒரு வித்தியாசமான இறுக்கம் நிலவியது.
வடக்கே தொலைவில் தாக்குதல் தீவிரமடையும் போது நாம் ஜெர்மானி யர்களின் கவனத்தை வல்லோர்டினுவின் பக்கம் திசை திருப்பி வைத்திருக்க வேண்டும்...
சந்தடியையும், சல சலப்பையும் ஏற்படுத்திக் கொண்டு நாம் ஆர்ப்பாட்டமாக முன்னேறுவோம்!
படகு கரையைத் தொட்டதும் மணலில் குதித்த பிரிட்டிஷ் வீரர்கள் அடுத்திருந்த செங்குத்துப் பாறை பகுதியை நோக்கி தடதடவென்று ஓடினார்கள்...
க்ராக்!
க்ராக்!
அவர்களை நோக்கி ஒன்றிரண்டு தோட்டாக்களே சீறிக் கொண்டு வந்தன...
ஏன் இப்படி....? எதிர்ப்பு கடுமையாக இருக்கும் என்றல்லவா எதிர் பார்த்தேன்!
பாறை உச்சியை நோக்கி ஏறிச் செல்கையில் கை வெடி குண்டுகளை வீசியும், மெஷின் துப்பாக்கிகளை இடை விடாது முழக்கிக் கொண்டும் தடபுடல் பண்ணினார்கள்.
எதிர்ப்பையே காணோமே!
ரட..டட..டட!
அதற்காக மெத்தனம் கூடாது!
சற்றைக்கெல்லாம் ஜெர்மானியர்கள் சரணடைந்தனர்...
சரணடைகிறோம்
புரிந்து கொள்ளவே முடியவில்லையே!
திடீரென்று வடதிசையில் தொடுவானம் பற்றி எரியத் தொடங்கியது...
நம் வீரர்கள்தான் அங்கே வாங்கிக் கட்டிக் கொள் கிறார்கள்... ஜெர்மானியர்கள் அவர்களுடைய வரலை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருந் திருக்கக்கூடும்!


நடமாட்டமில்லாத கடற் பகுதியில் கரையேற வேண்டிய அந்த பிரதான அதிரடிப்படை எதிரிகளின் எதிர்பாராத தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் திணறியது...
கொஞ்சமும் எதிர்பாராத நெருக்கடி!
இது என்ன கொடுமை? எதிரிகளுக்கு நாம் இங்கே தரையிறங்கப் போவது எப்படித் தெரிந்தது? இது பரம ரகசியமான திட்டமாயிற்றே!
அந்த படைப் பிரிவின் தலைவரான கர்னல் மார்கனுக்கு எதிரிகளின் சூழ்ச்சி வலையில் தாங்கள் வீழ்ந்துவிட்ட உண்மை உறைத்தது...
பின் வாங்கி விடுவோமா... ஸார்?
கூடவே கூடாது... இந்த திறந்த வெளி ஒரு தற் கொலை மைதானம்... முன்னேறிச் செல்வது ஒன்றுதான் உயிர் பிழைக்க வாய்ப் பளிக்கும்... செத்தாலும் வீர மரணம் என்ற பெருமையாவது மிஞ்சும்!
அவர்களுக்கு பாதுகாப்புத்தர யுத்தக் கப்பலிலிருந்து பீரங்கிகளை முழக்கிக் கொண்டிருந்தவர்களுக்கு உண்மை நிலவரம் புரிந்தது..
ஏதோ குளறுபடி நடந்தி ருக்கிறது ஸார்.. இது முழுக்க முழுக்க ரகசியத் தாக்குதல் என்று திட்ட மிடப்பட்ட ஒன்று.
பூம்! பூம்!
கையிருப்பு தீரும்வரை தொடர்ந்து இயங்குமாறு பீரங்கி வீரர்களுக்கு உத்தரவிடுங்கள்.


தொலைவில் கேட்ட வெடி முழக்கத்தின் தீவிரத்தை வைத்து, அங்கே சென்ற அதிரடிப் படையினர் வகையாக மாட்டிக் கொண்டு விட்டார்கள் என்று கணித்தார் மாத்யூஸ்.
அவர்களுக்கு நாம் உதவிட வேண்டும்! கார்ஸன் நீயும் காய முற்ற வீரர்களும் கைதிகளை அழைத்துக் கொண்டு நம் படகுக்கு செல்லுங்கள். மற்றவர்கள் வடதிசையில் முன்னேறு கிறோம்.
இரட்டிப்பு வேகத்தில் போனால் கூட நேரத்திற்கு நாம் அங்கே போய்ச் சேர முடியாது காப்டன்.
வழியில் ஜெர்மானிய வாகனம் ஏதையாவது கைப்பற்றிக் கொள்வோம்!
தென் திசையிலிருந்து வாகனங்கள் வரும் ஓசை வந்தது..
நல்ல வாய்ப்பு.. ஓடி வாருங்கள்!
அங்கே வீழ்ந்து கிடந்த ஒரு மரத்தை அசுர வேகத்தில் சாலையின் குறுக்கே இழுத்துப் போட்டார்கள்!
மரங்களின் பின்னால் ஒளிந்தவாறு காத்திருந்தார்கள்.
பீரங்கி வண்டிகள்! சரியான சவாலாகத் தானிருக்கும்! ஆனாலும் ஒரு கை பார்த்து விடலாம்!


முதல் டாங்கி நின்றதையடுத்து மற்றவைகளும் ஒன்றன் பின் ஒன்றாக நின்றன.
வந்து இந்த மரத்தை அப்புறப்படுத்தி ஒத்தாசை செய்யுங்கள்.
எல்லோரும் வெளியேறி இறங்கி சாலைக்கு வந்ததும் மின்னல் வீரர்கள் சரமாரியாக சுடத் தொடங்கினார்கள்.
ஆஆஆ...
டுமீல்!
டுமீல்!
சில நிமிடங்களுக்குப் பின் அந்த டாங்கிகள் வடக்கு நோக்கி மீண்டும் ஓடத் தொடங்கின - புதிய உரிமையாளர்களோடு!



நமது வாகனங்களே! . நம்மை தாக்குகிறார்கள் -ஆனால் இது எப்படி?
முதலில் அவர்கள் எதிர் கொண்டது, கர்னல் மார்க்கனின் படைப்பிரிவு மீது சரமாரியாக குண்டுகளை வீசிக் கொண்டிருந்த 88 எம்.எம். வகை பீரங்கிகளை கொண்ட ஜெர்மானிய படைப்பிரிவை... சாலையில் வாகாக நின்று கொண்டு எதிரிகளை பின்னாலிருந்து தாக்கத் தொடங்கினார்கள் மின்னல் படை வீரர்கள்.
பின்னர் அங்கிருந்து விலகிச் சென்று ஒரு எண்ணெய் கிடங்குக்கு தீயிட்டனர்...
டூம்!!
அங்கே சூழ்ந்திருந்த காரிருளும், நிலவிய குழப்பமும் பிரம்மாண்டமான படை ஒன்று தங்களை தாக்குகிறது என்ற பிரமையை எதிரிகளிடம் தோற்றுவித்தது. செய்திகள் பறந்தன...
அனைத்து யூனிட்டுகளுக்கும்... வலுவான எதிரிப்படை எங்களை பின் நின்று தாக்குகிறது..


அவர்களுக்கு உதவிட கிழக்கிலிருந்து வந்த ஜெர்மானிய படையை மின்னல் வீரர்கள் அசுரத்தனமாக தாக்கினார்கள்.
ஆஆஆ...
ஒளிந்திருந்து தாக்கு கிறார்கள்... ஓடிப் பதுங்குங்கள்
உதவிக்கு வந்த படைப்பிரிவை முடக்கிப் போட்ட பின் காலாட் படையின் பக்கம் பீரங்கிகளை திருப்பினார்கள் மின்னல் படையினர்.
எதிரிகளிடையே பீதியும், குழப்பமும் தலை தூக்கியது...
இங்கே என்னதான் நடக் கிறது? நம் பீரங்கிப் படையே நம்மை தாக்கு கின்றனவே.. ஏன்?


ஜெர்மானியர்களின் தாக்குதல் வலுவிழந்துவிட்டதை கர்னல் மார்கனின் வீரர்கள் தெளிவாக உணர்ந்தனர்...
ஹே..! நம் வீரர்கள் சிலர் எப்படியோ பின்னால் போய் எதிரிகளை சூழ்ந்து கொண்டு விட்டனர்.
நல்ல வாய்ப்பு! முனைப்பாக அவர்களை இப்போது நெருக்கினுல் வெற்றி நிச்சயம்! - முன்னேறுங்கள்!
ஜெர்மானியர்கள் பெரும் எண்ணிக்கையில் சரணடைந்தனர்... எதிரிகளின் ராடார் நிலையை பொறியியல் வல்லுனர்கள் தகர்த்து தரைமட்ட மாக்கினார்கள்... வெற்றி முழுமையானது.
மின்னல் வீரர்களின் செயல் வேகமும், மதியூகமும் அந்த யுத்தத்தின் போக்கையே தலைகீழாக்கிவிட்டன...



ஆனால் அந்த வெற்றியை ஈட்டுவதில் ஏற்பட்ட இழப்பும் கணிசமாகவே இருந்தது... பிஸெர்டாவிலிருந்த நேச நாடுகளின் தலைமையகத்தில் உளவுத்துறை தலைவரான கர்னல் பென்ஸன், திட்டக் குழுவின் தலைமைப் பொறுப்பிலிருந்த ஜெனரலோடு அந்த மோதலினால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி விவாதம் நடத்தினர்.
எவ்வளவோ எச்சரிக்கையோடு நாம் இருந்த போதிலும் நம் திட்டத்தை எதிரிகள் முன் கூட்டியே தெரிந்து கொண்டிருக்கிறார்கள் - அதெப்படி?
அந்தக் கேள்விக்கான விடை ரொம்ப கசப்பானது ஸார். நம்முடைய திட்டக் குழுவில் எதிரிகளின் கையாள் ஒருவன் இருக்கிறான்!
நிஜம்தானா....நீங்கள் சொல்வது?
அவனைகுறிக்கும் ஜெர்மானிய சங்கேத வார்த்தை 'நெமோ' என்று கூட நமக்குத் தெரியும்... கர்னல் ஹண்டர், கர்னல் டெலிலிங், மேஜர் பென்லேக் இம்மூவரில் யாரோ ஒருத்தர்தான் அந்தத் துரோகி என்கிற வரை நெருங்கி விட்டோம்! ஸார்!
பென்லேக்? இருக்கவே முடியாது! அவரை நான் நன்கு அறிவேன்... என் தந்தையோடு ஸான்டர்ஸ்ட் போனவர்... அதிபுத்திசாலி!
பட்டியலில் இன்னும் இரண்டு பேர் இருக்கிறார்கள் - உண்மை கசந்தாலும் அவர்களில் ஒருத்தர் துரோகி என்பது உறுதி!
ஜெனரல் கோபாவேசமாக பேசலுற்றார்!
இந்த விஷயத்தில் நாம் அசட்டையாக இருக்க முடியாது! இத்தாலி மீது நாம் நடத்தும் தாக்குதல் நமக்கே பேரபாயத்தை விளைவித்துவிடும்! "நெமோ" யார் என்று எப்படியாவது உடனடியாக நாம் கண்டுபிடித்தேயாக வேண்டும்!



அதற்கு ஒரு வழி இருக்கிறது ஸார்... மூன்று அதிகாரிகளிடமும் திடீர் தாக்குதலை திட்டமிடும் பணியை ஒப்படைப்போம்! ஒவ்வொருவருக்கும் அவரவர் திட்டம் பற்றிய விபரம் மட்டுமே தெரிய வேண்டும். இந்த ஏற்பாட்டில் "நெமோ" தன்னுடைய தாக்குதல் திட்டம் பற்றி மட்டுமே ஜெர்மானியர்களுக்கு தகவல் அனுப்ப முடியும்!
புரிகிறது - மேலே சொல்லுங்கள்!
ஒவ்வொரு அதிரடிப் படையின் தலைமையதிகாரிக்கும் "கடற்கரையில் இறங்கிய பிறகே பிரித்துப் பார்க்க வேண்டும்" என்ற நிபந்தனையோடு ஒவ்வொரு கடித உறையை கொடுத்தனுப்புவோம். அந்த உத்தரவில் பாதை மாறி வேறொரு திசையில் முன்னேறிச் செல்லுமாறு நாம் சொல்லுவோம்! நிறைவேற்ற வேண்டிய இலட்சியமும் மாற்றப் பட்டிருக்கும்.
ஒவ்வொரு படைப் பிரிவும், தங்களுடைய முந்தைய தடத்தில் ஜெர்மானியர்கள் தங்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்து வர ஒரு ஒற்றனை அனுப்ப வேண்டும். எந்த படைப்பிரிவின் முந்தைய பாதையில் ஜெர்மானியர்கள் காத்திருக்கிறார்களோ அந்த படைப்பிரிவுக்கான திட்டத்தை தீட்டிய திட்ட அதிகாரிதான் "நெமோ!"
அருமையான யோசனை... கர்னல்!
மூன்று தினங்களுக்குப் பின் மாத்யூஸ் தாங்களுடைய அடுத்த தாக்குதல் பற்றிய விவரங்களை தன் வீரர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்...
இத்தாலியிலிருக்கும் ஜெர்மானிய படையை நிலைகுலைய செய்யும் நோக்கில் நடத்தப்படும் தொடர் தாக்குதலில் இதுவும் ஒன்று.
'மின்னல் படை' மீது மேலதிகாரிகள் வைத்துள்ள நம்பிக்கைக்கு இது ஓர் சான்று!


ட்ரெவிஞேவில் நாம் கரையேறுகிறோம்.. அடுத்து இருக்கும் மலைத் தொடரை ஏறிக் கடந்து எதிரிகளை பின்னாலி ருந்து தாக்குகிறோம்!
அன்றிரவு - நெமோ என்று ஜெர்மானியர்களால் குறிப்பிடப் பட்ட மனிதன் தன் கூடாரத்தில் இரகசியமாக பதுக்கி வைத்திருந்த டிரான்ஸ்மிட்டரை வெளியில் எடுத்து செய்தியனுப்பத் தொடங்கினான் ....
வெகு தொலைவில் கடலில் தனித்த நின்ற ஒரு சப்மரைன் அந்த செய்தியை வெகு சிரத்தையோடு கிரகித்துக் கொண்டது..
அதை மொழி பெயர்த்து விட்டாயா?
யெஸ்.. காப்டன்.. தாக்குதல் 8ம் தேதி நடைபெறுமாம் 'மின்னல் வீரர்கள்' வருகிறார்களாம். ட்ரெவிஞே கடற்கரையில் இறங்கி மலைத் தொடரை கடந்து நம்மை பின்னாலி ருந்து தாக்குவார்களாம்!


குறிப்பிட்ட நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள மின்னல் படையினர் தயாரான போது..
எங்கோ குளறுபடி ஏற்பட்டிருப்பதான குறுகுறுப்பு ஏற்படுகிறது என் உள்ளுணர்வில்- அது ஏன்?
ஒரு ஸ்டாஃப் ஆபீஸர் ஏதோ இரகசியம் பேச மாத்யூஸை தனியே அழைத்துச் சென்ற போது அவருடைய மனக் குழப்பம் வலுப்பெற்றது..
இந்தாருங்கள் முத்திரை யிடப்பட்ட கடித உறை... இது உங்கள் வசம் இருப்பது யாருக்குமே தெரியக் கூடாது... கடற்கரையில் போய் இறங்கிய பிறகு இரகசிய மாக பிரித்துப் படியுங்கள்...
தன் வீரர்கள் உற்சாகமாக படகில் நிரம்பத் தொடங்கிய வேளையிலும் மாத்யூஸின் மனச் சஞ்சலம் கொஞ்சமும் குறையவில்லை -
ஆல்ரைட்.... வருவது வரட்டும்! ஈடிணை யில்லாத நெஞ்சுரமும் செயல்திறனும் படைத்த வீரர்கள் என் படையில் இருக்கும் போது நான் ஏன் கிலேசமடைய வேண்டும்!


வரப் போகும் துரதிர்ஷ்டத்திற்கு முன்னோடியாக் எதிரிகளின் வேவு விமானம் ஒன்று மின்னல் வீரர்களின் படகுகளை இனம் கண்டு கொண்டது..
அவை எதிரிகளின் படகுகள்... தாக்குதல் நடத்த போய்க் கொண்டிருக்கிறார்கள் போலும்.. குண்டுகளை வீசி அழிப்போமா?
நடக்கட்டும்!
சட்டென்று அந்த விமானம் உயரமிழந்து நெருங்கி வந்த போது மாத்யூஸ் அவசர உத்தரவுகளை பிறப்பித்தார்.
படகை நேர் கோட்டில் செலுத்தாமல் தாறுமாறாக ஓட்டுங்கள்.
படகிலிருந்த பீரங்கியை எதிரிகளின் விமானத்தை நோக்கித் திருப்பி சுட முயற்சிப்பதற்குள் அந்த விமானம் குண்டுகளை போட்டுவிட்டு வெகு தொலைவு போய் விட்டது..


போடப்பட்ட இரண்டு வெடி குண்டுகளில் ஒன்று படகின் வெகு அருகாமையில் விழுந்த போது ஏற்பட்ட பலத்த அதிர்வுக்கு படகின் விளிம்பில் நின்றிருந்த மாத்யூஸ் இலக்கானார்.
பூம்! பூம்!
ஐயோ... காப்டன் பலியாகிவிட்டார்.
இல்லை வெறும் மயக்கம் தான்! இவருக்கு சுய வுணர்வு திரும்பும் வரை நான் பொறுப் பேற்கிறேன்!
அவ்விரு படகுகளும் கரையை தொட்ட பிறகும் மாத்யூஸ் விழித்துக் கொள்வில்லையாதலால் லெப்டிலென்ட் கேய்னரே அவர்களை வழிநடத்திச் சென்றார்.
காப்டனை என்ன செய்வது... ஸார்?
மலையடிவாரத்தில் பாதுகாப்பான இடத்தில் விட்டுச் செல்வோம்.
இரகசிய கடித உறை பற்றி ஏதுமறியாத கேய்னர் தன் வீரர்களை திட்டமிடப்பட்ட பாதையிலேயே அழைத்துச் சென்றான்...
என்னைத் தொடர்ந்து வாருங்கள்!


இவர்களை எதிர்பார்த்து பதுங்கிக் கிடந்த ஜெர்மானியர் களுக்கு கொண்டாட்டமாகிவிட்டது..
வகையாக நம் வலையில் வந்து வீழ்ந்து விட்டார்கள்.. நான் உத்தரவிட்டதும் சரமாரியாக சுட்டுத் தள்ளுங்கள்.
இதற்கிடையே, கடற்கரை பகுதியில் சுயவுணர்வு வரப் பெற்ற மாத்யூஸுக்கு என்னதான் நடந்தது என்று கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகம் வந்தது. அவசர அவசரமாக இரகசிய கடித உறையை எடுத்துப் பிரித்து படிக்கத் தொடங்கினார்.
“கொடுக்கப்பட்ட தடத்தில் நீங்கள் முன்னேறிச் செல்லக் கூடாது... மாறாக, வடதிசையில் கடற்கரையோரமாகவே ஒரு மைல் தொலைவு சென்று ஐஸோட்டா பள்ளத்தாக்கை தொட்டு ஆலிவ் தோப்பினூடே புகுந்த முன்னேறி தாக்குதலை நடத்தவும்.”
மிரட்சியடைந்த மாத்யூஸ் துள்ளி எழுந்து, கால்கள் தள்ளாடிய போதிலும் தன் தோழர்கள் சென்ற திசையில் விரைந்தார்.
நில்லுங்கள்! கேய்னர் அவர்களை திரும்ப அழைத்து வா... தாக்கு தலை உடனே நிறுத்து..


அவருடைய கூப்பாடு ஓயுமுன்னரே இடி முழக்கம் என கேட்கத் தொடங்கியது துப்பாக்கி, பீரங்கிகளின் தொடர் இயக்கம்.
சே... எல்லாமே கெட்டு விட்டது! அநியாயமாக பலியாகப் போகிறார்கள் என் தோழர்கள்!
அபாயம் என்று தெரிந்தும் தொடர்ந்து அவர் மோதல் நடந்த இடத்தை நோக்கி முன்னேறிச் சென்றபோது ஜுல்ஸ் கார்சியா எதிரே வந்தான்...
ஐயோ.. என்னால் எதையுமே பார்க்க முடியவில்லை... என் பார்வை பறிபோய் விட்டது!
அவனுடைய நெற்றியிலிருந்து வழிந்து கொண்டிருந்த இரத்தத்தை மாத்யூஸ் துடைத்து சுத்தம் செய்தார்.
கலவரமடையாதே... ஜுல்ஸ்! உன் பார்வை பறி போகவில்லை. இரத்தம் தான் உன் பார்வையை மறைத்திருக்கிறது!
ஏதோ குளறுபடி நடந்திருக்கிறது.. மின்னல் வீரர்கள் முதலில் திட்டமிடப்பட்ட தடத்திலேயே போய் அங்கே இவர்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த ஜெர்மானியர்களின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறார்கள். ஆக, மின்னல் படையினரின் அதிரடி தாக்குதலை திட்டம் தீட்டிய நபரே 'நெமோ' என்பது தெளிவு!
தலைமையக உளவுத்துறையை சேர்ந்த மேஜர் லூக் செஞ்சுரியன் கப்பலில் இருந்தவாறு எதிர் கரையில் நடந்து கொண்டிருந்த உக்கிரமான மோதலை கனத்த நெஞ்சத்தோடு மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தார்...


இதற்கிடையே, சண்டை நடந்து கொண்டிருந்த இடத்தில் மின்னல் வீரர்கள், கண்ணில்பட்ட மறைவிடங்களில் எல்லாம் பதுங்கிக் கொண்டு ஜெர்மானியர்களுக்கு வலுவான எதிரடி கொடுத்துக் கொண்டிருந்தனர்...
சற்று மேலே சரிவாக நிலை கொண்டிருந்த ஒரு பெரும் பாறையின் பின்னாலிருந்தவாறு எதிரிகள் சுடுவதைக் கண்ட கேய்னர் மினி பீரங்கி குழுவுக்கு உத்தரவிட்டான்...
அவர்களை குறி வையுங்கள்!
இதோ... அவர்களுடைய கதையை முடித்து விடுகிறோம்!
மூன்றாவது முயற்சியில் கச்சிதமாக அடித்துவிட்டார்கள்...
பூம்!
ஆ... ஐயோ!


ஆனால் அவர்கள் எதிர்பாராத விபரீதம் ஒன்று திடுமென அங்கே முளைத்தது. உடைந்து நொறுங்கிய அந்தப் பாறை அவர்களை குறி வைத்து சரிந்து வந்தது மின்னல் வேகத்தில்...
தப்பியோடுங்கள்...
லெப்டினென்ட் கேய்னரும் மற்றும் இரு வீரர்களும் அடுத்த நொடியில் பிணமாகிப் போயினர்... மற்ற பல வீரர்களுக்கு பலத்த அடி..
அந்த அதிர்ச்சியிலிருந்து அவர்கள் மீள்வதற்குள் மூன்று திசைகளிலிருந்தும் ஜெர்மானியர்கள் அங்கே ஓடோடி வந்து சேர்ந்தனர்..
பாறைகளின் அடியில் சிக்குண்ட பிரிட்டிஷ் வீரர்களை விடுவித்து கைதிகளாக்கி அழைத்துப் போனார்கள் ஜெர்மானியர்கள்.
ஜூல்ஸ் துப்பாக்கியை உயர்த்தி குறி பார்த்தான்...
அந்த அவலமான காட்சியை மாத்யூஸும் கார்சியாவும் தங்களுடைய மறைவிடத்திலிருந்தவாறு காண நேரிட்ட போது கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது..
ஹூம்... என்ன கொடுமை பார்த்தாயா ஜூல்ஸ் நாம் இவர்களை எப்படி யாவது மீட்டாக வேண்டும்!
அதுதான் நம் உடனடி இலட்சியம்.. காப்டன்!
ஆரம்பிப் போமோ?
இப்போது வேண்டாம்! பலனளிக்காது! நாம் இங்கே இருப்பது ஜெர்மானியர்களுக்கு தெரியாது என்பது நமக்கு சாதகமான அம்சம்! நம்மை வெளிக்காட்டி அதை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?



அதையடுத்து, அவர்களிருவரும் அந்தக் கூட்டத்தை இரகசியமாக பின் தொடர்ந்து சென்றார்கள்.
கைதிகளாக கொண்டு செல்லப்பட்ட பிரிட்டிஷ் வீரர்களைப் பார்த்து வெற்றி மமதையோடு சிரித்தான் கர்னல் ஹோர்ஸ்ட்
ஓ... இவர்கள் தான் 'மின்னல் படை வீரர்கள்' எனப்படும் சூரப் புலிகளோ... ஐயோ பாவம்!
மிக் பால்ஸ்கியும் ஜான் ஸ்மித்தும் தோளோடு தோள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். மிக்கின் முன்னால் அவனுடைய நாட்டவனும் நெருங்கிய தோழனுமான ஜூலியஸ் ஒபோல்கா சென்று கொண்டிருந்தான். அவர்கள் ஒரு கிராமத்தை நெருங்கியபோது ஒபோல்கா திடீரென்று பாய்ந்து தப்பியோட முயன்றான்.
அஹ்...!
அவனை குறி வைத்த ஜெர்மானியனை குறுக்கே பாய்ந்து தடுத்தான் மிக்..
டுமீல்!
ஒபோல்காவின் பாதையில் இன்னும் எத்தனையோ இடைஞ்சல்கள்...
பிடியுங்கள் அவனை!
கர்னல் ஹோர்ஸ்ட் அங்கே விரைந்து வந்தான் உருவி எடுத்த ஆட்டோமேடிக் பிஸ்டலோடு..
தப்பியோட நினைப்பவர் களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்.


க்ராக்!
அற்ப நாயே... தப்பி யோட முயன்ற உனக்கு இதுதான் சரியான தண்டனை..!
மிக்கை இரு ஜெர்மானியர்கள் நையப் புடைத்து வீழ்த்தி னர்.. அவன் உயிர் தப்ப அதுவே காரணமாகிவிட்டது...
ணங்!
பின்னர் மீண்டும் அவன் மற்றவர்களோடு சேர்ந்து கொண்ட போது தனக்குள் மௌனமாக சூளுரைத்துக் கொண்டான்.
என்றாவது ஒரு நாள், எப்படியாவது நான் இந்த ஹோர்ஸ்டை கொல்வேன்!
கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்ட தங்களுடைய சகாக்களை பின் தொடர்ந்து வந்த மாத்யூஸும் ஜூல்ஸும் வழியில் எண்ணெய் சேமிப்பு கிடங்கு ஒன்றை கண்டனர்... முகப்பில் தனித்து நின்ற காவலன் அவர்களுடைய வரவை அறியவில்லை.


நம் தோழர்களை இங்கே தான் தற்காலிக முகாமில் வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.. அங்கிருக்கும் காவலர்களை அப்புறப்படுத்திவிட்டால் நம் ஆட்களை மீட்டு விடலாம்...
துப்பாக்கியை முழக்கிக் கொண்டு அதிரடியாக நாம் ஏன் பாயக் கூடாது காப்டன்!
அவசரப்படாதே.. நான் ஒரு திட்டம் வைத்திருக் கிறேன். சமயம் பார்த்து அதை செயல்படுத்து வோம்!
நேரம் ஓடிக் கொண்டிருந்தது.. மாத்யூஸும், ஜூல்ஸும் தரையோடு தரையாக பதுங்கி முன்னேறினர்கள்- எண்ணெய் சேமிப்பு கிடங்கை நோக்கி -
காற்று நமக்கு சாதகமாக நாமிருக்கும் திசையிலி ருந்து கிடங்கை நோக்கி வீசிக் கொண்டிருக்கிறது.
ஓ... உங்கள் திட்டம் புரிகிறது.. காப்டன்!
அந்த உலர்ந்த புற்கள் தீப்பொறி பட்டதும் கப்பென்று பற்றிக் கொண்டன. காற்றின் வேகத்தால் தீ மின்னல் வேகத்தில் கிடங்கு நோக்கி பாய்ந்து பரவியது.
அவர்களுடைய கவனத்தை திசை திருப்ப நிச்சயம் இது போதும்!


அத்தனை ஜெர்மானியர்களும் பதறியடித்துக் கொண்டு தீப்பற்றிக் கொண்ட இடத்தை நோக்கி ஓடினர்.
ஓடுங்கள்.. சீக்கிரம்! என்னெய் கிடங்கில் தீப்பற்றிக் கொண்டால் பெருத்த நாசம் விளைந்து விடும்!
ஓரிரு வீரர்களே இப்போது கைதிகளை காவல் காத்து நின்றனர்...
அருமையான வாய்ப்பு இது நமக்கு ஜூல்ஸ்!
முதல் பலி - முகப்பில் காவல் நின்ற காவலாளி!
ஐ..யோ!
டுமீல்!
டுமீல்!


அடுத்து - உள்ளே காவல் நின்ற ஜெர்மானிய வீரர்கள்...
நண்பர்களே.. ஓடி வாருங்கள்... தப்பி யோட இதை விட்டால் இன்னொரு வாய்ப்பு கிடைக்காது!


மாத்யூஸ், ஜுல்ஸ் இருவரின் தாக்குதலுக்கும் தப்பிய மற்ற ஜெர்மானியர்களை கைதிகளாக இருந்த பிரிட்டிஷ் வீரர்களே தூக்கி எறிந்து விட்டார்கள்.


நொடிப் பொழுதும் காலம் தாழ்த்தாமல் தன் வீரர்களை கடற்கரை பகுதியை நோக்கி திருப்பி அழைத்துச் சென்றார் மாத்யூஸ் - தங்களை அங்கிருந்து மீட்டுச் செல்ல மேலிடம் உரிய முன்னேற்பாடுகளை செய்து வைத்திருக்கும் என்ற நம்பிக்கையோடு! ஆனால் அவர்கள் கடற்கரை பிரதேசத்தை சமீபித்த போது -
கடவுளே..! ஜெர்மானியர்கள் அல்லவா நம்மை எதிர்பாத்து மிகுந்த பலத்தோடு இங்கே பரவிக் கிடக்கிறார்கள்! தப்பிச் செல்ல வாய்ப்பேயில்லை.
இனி என்ன செய்வது காப்டன்?
ஜெர்மானியர்களின் கணிப்புக்கு எதிர்மாறான காரியத்தைச் செய்வோம்! தப்பி வெளியேற வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டு கடற்கரை பிரதேசத்தில் சுற்றியலைந்து கொண்டிருக்காமல் நாம் நாட்டுக்குள்ளே பிரவேசிப்போம்!
மிகுந்த எச்சரிக்கையோடு அவர்கள் அமைதியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு மைல் தொலைவை கடந்த நிலையில் திடீரென்று மிக் பால்ஸ்கி பிய்த்துக் கொண்டு ஓடயத்தனித்தான்...
ஹே,... மிக்.. எங்கே ஓடுகிறாய்?
விடுங்கள் என்னை.. நான் திரும்பிச் சென்று ஹோர்ஸ்டை கொல்லப் போகிறேன்.. என் நண்பனை கொலை செய்த பாதகன் அவனை பழி வாங்குவதாக சபதமிட்டிருக்கிறேன்.


தனிப்பட்ட கோப தாபங்களை காட்ட இதுவல்ல தருணம்.. நீ என் அதிகாரத்தின் கீழ் இருக்கிறாய்.. எந்த பிரச்னையானாலும் நாம் சேர்ந்தே போராடுவோம் - புரிந்ததா?
சரி... காப்டன்
ஆனாலும் அந்த போலந்து நாட்டு இளைஞனின் நெஞ்சுக்குள்ளே குமைந்து கொண்டிருந்த எரிமலை அடங்கிய பாடில்லை...
நாஜிகளிடம் என் நாட்டவர் அனுபவித்த கொடுமைகளை இந்தக் காப்டன் அறியமாட்டார்... நான் பொறுமையாக காத்திருப்பேன் -
கிடைக்கும் முதல் வாய்ப்பில் அந்த கர்னலை என் கையாலேயே பழி வாங்குவேன்!
இதற்கிடையே இதே தருணத்தில் இத்தாலியின் பிரதான நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்ற இரு தாக்குதல்களும் முழு வெற்றி ஈட்டின...
எங்கள் வரவு ஜெர்மானியர்களுக்கு தெரியாது என்பது முக்கிய அம்சம். திட்டம் முழுமையாக வெற்றி பெற்றதற்கு அதுவே காரணம். எங்களோடு கிளம்பிய இன்னொரு அதிரடிப் படையும் இதே மாதிரி வெற்றி ஈட்டியதாக கேள்விப்பட்டோம்!
பிஸெர்டாவில் பிரிட்டிஷ் இராணுவ தலைமையகத்தில், அடுத்து இத்தாலியை முழு ஆக்கிரமிப்பு செய்வதற்கான திட்டம் தீட்டப்பட்டு வந்தது.
இரகசிய அதிரடி தாக்குதல் மட்டுமே வெற்றிக்கு உத்தரவாதம் தர முடியும். ஸார்டினியா மீது நம் கவனம் இருப்பதாக போக்குக்காட்டி ஜெர்மானியர்களை நம்ப வைத்துவிட்டு நாம் ஸலெர்னே அருகே கரையேறுவோம்.



பிஸெர்டா உளவுத்துறை தலைமையகத்தில் கர்னல் ஹண்டர்,கர்னல் டௌலிங்,மற்றும் மேஜர் பென்லேக் . ஆகிய மூவரும் அடுத்து மேற்கொள்ளப் போகும் தாக்குதல் பற்றிய விவாதம் நடத்திக் கொண்டிருந்தனர்...
இன்று மதியம் நடக்க விருக்கும் திட்டக் குழு கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.
தாக்குதலை நடத்துவதை விட அதை வடிவ மைத்துக் கொடுப்பது எவ்வளவு கஷ்டமான பணி என்று மற்றவர்களுக்கு தெரிவதில்லை.
அப்போது கர்னல் பென்ஸன் கதவை தள்ளித் திறந்து கொண்டு உள்ளே திடீர் பிரவேசம் செய்தார்..
தோழர்களே... கசப்பான ஒரு கடமையை நான் இப் போது செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக் கிறேன் -"நெமோ"
என்னும் துரோகி யார் என்று நமக்கு அடையாளம் தெரிந்து விட்டது! அந்த நபரை...
மற்ற மூன்று அதிகாரிகளும் அதைக் கேட்டு ஒரு கணம் அதிர்ச்சியில் வாயடைத்துப் போயினர். மறு விநாடி மேஜர் பென்லேக் பளிச் சென்று கதவை நோக்கிப் பாய்ந்தார்..
பிடியுங்கள் அவரை...
ஒரு காவலாளியை தள்ளிவிட்டு அவர் முன்னேறி வெளிப் பாய்ந்தபோது இரண்டாமவன் மின்னல் வேகத்தில் செயல்பட்டான்...
மடோர்
அஹ...




நெமோ என்று எதிரிகளால் குறிப்பிடப்பட்ட மேஜர் பென்லேக் கைது செய்யப்பட்டார்...
நம்பவே முடியவில்லை...
நாட்டுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பத்திலிருந்து வந்தவர் பென்லேக்!
ஆமாம்... ஆனால் இவருடைய தாயார் ஒரு ஜெர்மானிய பெண். சிறுவயதில் ஜெர்ம னியில் கல்வி பயின்றதால் என்னவோ நாஜி கருத்துக் களில் இவருக்கு ஆழமான ஈடுபாடு ஏற் பட்டிருக்கிறது.
இனி அவருடைய கதி?
இராணுவ விசாரணை -முடிவில் சுடும் குழுவின் எதிரில் நிறுத்தப்படுவார்! அதுதான் நடக்கும்!
பென்லேக்கின் துரோகச் செயல் காரணமாக அங்கே இத் தாலியில், மாத்யூஸின் தலைமையின் கீழ் இயங்கிய 'மின்னல் படை வீரர்கள்' நெருக்கடிக்குள்ளாகி தத்தளித்துக் கொண்டிருந்தனர். பலத்த குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி யிருந்த பாஸ்கானு நகரின் விளிம்பிலிருந்த கைவிடப் பட்ட ஒரு பாக்டரியினுள் தஞ்சம் புகுந்தது அந்தச் சிறு படைப் பிரிவு...



அடித்துப் போடப்பட்டது போல் இரவு முழுக்க அயர்ந்து தூங்கிய அந்த வீரர்கள் விடியும் வேளையில் சுறுசுறுப்போடு எழுந்தனர்...
ஹே.. இங்கே பாருங்கள் -ஜெர்மன் சீருடைகள்! ஜெர்மானிய வீரர்களுக்கு சீருடை தயாரிக்கும் பாக்டரி இது போலும்!
வீரர்களுக்குரியவை மட்டுமின்றி அதிகாரி களுக்குரிய சீருடைகளும் இங்கே இருக்கின்றன...
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் அதிர்ஷ்டம் நம் பக்கம் த ன் கடைக் கண் பார்வையை திருப்பி இருக்கிறது..! நான் சொல் வது உங்களுக்கு அர்த்தம் ஆகிறதா? நாம் ஜெர் மானியர்களாக மாறு வேடம் புனைந்து செல்ல வாய்ப்பு கிட்டியிருக்கிறது இப்போது!
ஏய் ஜேன்... இது எனக்கு லொட லொட என்றிருக் கிறது. இதைப் போட்டுக் கொண்டு அதை என்னிடம் கொடு!
ஆமாம்... எனக்கும் இது போதவில்லை..!
எனக்கு ஜெர்மன் மொழி நன்றாக தெரியுமாதலால் நான் அதிகாரியாக நடிக் கிறேன்.. உனக்கும் ஓரளவு அந்தப் பாஷை தெரியுமாதலால் நீ எப்போதும் என் அருகிலேயே இரு ஜேன்!
மீண்டும் இருள் கவிழ்ந்த போது அவர்கள், வெளிக் கிளம்பினார்கள்..
வாகனமும் ஆயுதங்க ளும் நமக்கு இப்போது தேவை!


ஒரு மைல் தொலைவை கடந்த பின்னர் சப்ளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த ஒரு இடத்தை அவர்கள் கண்டனர்..
நான் போய் அந்த காவலாளியிடம் பேச்சுக் கொடுக்கிறேன். நீ கபால் என்று பாய்ந்து அவனை அமுக்கி ரைபிளை பிடுங்கு!
மாத்யூஸ் அந்த காவலாளியை நோக்கி வசை பாடியபோது ' அவன் அரை தூக்கத்திலிருந்தான்..
இதுதானா நீ காவல் நிற்கிற இலட்சணம்...! விழிப் போடு சுறுசுறுப்பாக நிமிர்ந்து நில்!
மறுவினாடி -
ஆவ்!
உணவுப் பொருட்கள் நிரம்பிய ஒரு லாரி உள்பட மொத்தம் மூன்று லாரிகளை கவர்ந்து எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள்.
என் வசம் இருக்கும் வரை படத்தின்படி அருகே மாண்டிஸெல்லோவில் ஆயுதக் கிடங்கு ஒன்று இருக்கிறது. நேராக நாம் அங்கே செல்வோம்!


அதிகார தோரணையோடு எவ்வித தயக்கமும் இன்றி நேராக ஆயுதக் கிடங்குகளை நெருங்கினார்கள்... வாகனத்தை விட்டு மிடுக்காக இறங்கிய மாத்யூஸ் அங்கே நின்றிருந்த காவலாளியை திட்டினார்...
ஸாரி... மேஜர்!
அதிகாரி வந்தால் சல்யூட் செய்ய வேண்டுமென்ற மரியாதை மறந்து விட்டதா உனக்கு?
அங்கே ஓடோடி வந்து சேர்ந்த கார்ப் பொரலையும் மாத்யூஸ் விட்டு வைக்கவில்லை...
உள்ளே என்ன வகை ஆயுதங்கள் இருக்கின்றன?
சிறிய வகை பீரங்கிகளும், ரைபிள்களும், வெடி மருந்துகளும் இருக் கின்றன ஸார்.
அவை போதும்... அவற்றை லாரியில் ஏற்ற என் சகாக்களுக்கு ஒத் தாசை செய்யுங்கள்...
ஓ.கே... மேஜர்!
மற்ற ஜெர்மானிய வீரர்களைப் போல் அந்த கார்ப் பொரலுக்கும் மேலதிகாரிகள் என்றால் படு உதறல்... அதனால் எதிர் கேள்வி எதுவும் கேட்காமல் மளமளவென்று உத்தரவை நிறைவேற்றலானான்..
திரும்பவும் அந்த பாக்டரிக்கு சென்று நம்முடைய கமாண்டோ உடுப்புகளை சேகரித்துக் கொள்வோம். எதிரி களிடையே குழப்பத்தை உண்டு பண்ண அவை நமக்கு தேவைப் படலாம்...


மறுநாள் காலை கமாண்டோ சீருடையில் பெர்ரல்டோ அருகே ஒரு வாகனத் தொடரை அதிரடியாக தாக்கினார்கள்...
அருகிலிருந்த அத்தனை தகவல் தொடர்பு மையங்களிலிருந்தும் செய்திகள் பறந்தன...
...நம்முடைய பின்னணி பிரதேசத்தில் பிரிட்டிஷ் கமாண்டோக்கள் இஷ்டத்திற்கு நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.
ஒரு மறைவிடத்தில் மின்னல் படை வீரர்கள் சீருடைகளை மாற்றி மாட்டிக் கொண்டார்கள்...
எனவே, ஜெர்மானியர்களை ஏற்றி வந்த கார் அவர்களை எதிர் கொண்ட போது அவர்கள் அலட்டிக் கொள்ளவேயில்லை...
யார் நீங்கள்? எங்கே போகிறீர்கள்?


ப்ரஷ்யன் சம்பிரதாயத்தின்படி, எதிரே வந்த வாகனத்தில் மேஜர் இருப்பதைக் கண்ணுற்ற ஜெர்மானிய லெப்டினெண்ட் மரியாதை நிமித்தம் எழுந்து விறைப்பாக நின்றான்.
பிரிட்டிஷ் கமாண்டோக் களை தேடிப் போய்க் கொண்டிருக்கிறோம் அவர்களைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?
இல்லை.. மேஜர் ஸார்! ஆனால் பெர்ரல் டோ பகுதியிலிருந்து துப்பாக்கி முழக்கம் வரக் கேட்டோம்!


அன்றிரவு, பெர்ரோவியோ ஸ்டேஷனுக்கு அருகிலிருந்த சிக்னல் போஸ்டை கைப்பற்றி அதில் விஷமம் பண்ணினார்கள் கமாண்டோ வீரர்கள்.
குழப்பத்தை உண்டு பண்ணி அவர்களுக்கு இது தலைவலியை கொடுக்கும்!


படு பயங்கர விளைவுகள் ஏற்பட்டன...
நேருக்கு நேர் மோதிக் கொண்டு விட்டன... இந்த தடத்தை ஜெர்மானி யர்கள் லேசில் சரி செய்ய முடியாது - திண்டாடிப் போவார்கள்






தொடர்ச்சி 45-ம் பக்கத்தில்

## சந்தா விபரம்

**(லயன் காமிக்ஸ் மட்டும்)**

ஓராண்டுச் சந்தா - ரூ. 50/-
அரையாண்டுச் சந்தா - ரூ. 30/-

M.O. அல்லது D.D. அனுப்ப வேண்டிய முகவரி

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்**

த. பெ. எண் 374, சிவகாசி - 626 123.

## வாசகர் கடிதம்

- *கிருபாகர் ஆப்ரஹாம், சென்னை - 24.*

ரூ. 20/- விலையில் லயனின் 100வது இதழ் வருவது குறித்து ரொம்ப மகிழ்ச்சி. 'எதிரிக்கு எதிரி' யில் காரிகன் டாக்டர் செவனுடன் ஒன்றாகத் துப் பறிந்து வில்லனை வீழ்த்தியது **Superb! Camera tricks** உள்ள ஆங்கிலப் படம் பார்த்தது போல் இருந் தது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதைப் போல அவனுடைய பீரங்கி குண்டே அவன் கலத்தை அழித்ததாக அமைந்துள்ளது அருமை.

- *K. கார்த்திகேயன், ஈரோடு - 16.*

லயனின் 100வது இதழை ரூ. 30/- விலையில் அட்டகாசமாக வெளியிடுமாறு கேட்டுக் கொள் கிறேன். இதில் நமது முன்னனி ஹீரோக்களான டெக்ஸ் வில்லர், ஸ்பைடர், ஆர்ச்சி, இரட்டை வேட்டையர் ஆகியோரது சாகஸங்களை தவறாமல் இடம் பெற வேண்டும்.

- *M. சோமசுந்தரம், தருமபுரி.*

'பலி கேட்ட புதையல்' மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டியது. பரிசுப் போட்டிகள் வைத்த தற்கு நன்றி.

- *S. K. ராஜேஷ், டால்மியாபுரம்.*

"இன்ஸ்பெக்டர் டேஞ்சர்" பகுதி அருமையாக உள்ளது. அவரை ஒரு முழு நீளக் கதையின் நாயகனாக ஆக்கினால் என்ன?

1. உங்களுக்கு எந்த சைஸ் பிடித்திருக்கிறது?
   - ☐ பாக்கெட் சைஸ்
   - ☐ பெரிய சைஸ்

2. ரிப் கிர்பி கதைகளுக்கு உங்கள் சர்டிபிகேட் என்ன?
   - ☐ வெரி குட்
   - ☐ சுமார்
   - ☐ போர்

3. காரிகன் கதைகள் எப்படி?
   - ☐ வெரி குட்
   - ☐ சுமார்
   - ☐ போர்

4. பொதுவாகவே டெக்ஸ் வில்லர் கதைகள் பெரிதாக, நிறைய பக்கங்களை கொண்டதாக இருக்கும். அவற்றை இரண்டு பாகங்களாகப் பிரித்து அடுத்த-அடுத்த மாதங்களில் போடலாமா?
   - ☐ யெஸ். 2 பாகங்களாக போடுங்க.
   - ☐ நோ. தொடர்ச்சி விட்டுப்போகும். விலை அதிகமானாலும் ஒரே புக்காக போடுங்கள்.

5. தற்போது உள்ள நமது அட்டைப்பட Standards எப்படி உள்ளது?
   - ☐ 'பளிச்' ரகம்
   - ☐ இன்னும் கவனம் வேண்டும்
   - ☐



## உங்களைப் பற்றியும் சொல்லுங்களேன்...

உங்கள் பெயர் : ______________

முகவரி : ______________

☐

6. புக்கை கையில் எடுத்தவுடன் நீங்கள் படிப்பது எதை?
- ☐ கதை
- ☐ ஹாட்-லைன்
- ☐ டேஞ்சரின் க்ரைம் க்விஸ்
- ☐ வாசகர் கடிதம்
- ☐ புக் மார்கெட்
- ☐ மற்றது

7. ராணுவக் கதைகளை (மின்னல் படை; பெருச்சாளிப் பட்டாளம் etc., ) அடிக்கடி போடலாமா?
- ☐ தாராளமாக
- ☐ வேண்டவே வேண்டாம்

8. கார்டூன் சிறு கதைகள் (விச்சு, கிச்சு, ஜோக்கர் போன்றவை) இன்னும் நிறைய சேர்க்கலாமா?
- ☐ யெஸ்
- ☐ நோ

9. லயனின் ப்ளஸ் பாய்ண்ட்ஸ்
1. ____________
2. ____________
3. ____________

10. லயனின் மைனஸ் பாய்ண்ட்ஸ்
1. ____________
2. ____________
3. ____________

முகவரி : ____________

: ____________

வயது ____________ : ____________

படிப்பு : ____________

பொழுது போக்குகள் : ____________

காமிக்ஸ் படிக்கும் பழக்கம் எத்தனை காலமாக உண்டு? : ____________

இந்த இதழை எங்கே வாங்கினீர்கள்?
- ☐ புத்தகக் கடையில்
- ☐ இரவல்
- ☐ லெண்டிங் லைப்ரரி



# இன்ஸ்பெக்டர் டேஞ்சரின்
## க்ரைம் க்விஸ் – 3

பின் அட்டையிலுள்ள மினி மர்மத்திற்கான சரியான விடையை எழுதி அனுப்பக் கடைசித் தேதி : 27-1-94.

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 3 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்குப் பரிசு உண்டு!

ஆசிரியர்.



## க்ரைம் க்விஸ் – (2)

''எதிரிக்கு எதிரி'' இதழின் பின்னட்டையில் வெளியான க்ரைம் க்விஸ் (2) சற்றே சுலபமாக இருந்ததால் எக்கச்சக்கமான வாசகர்கள் விடை எழுதி அனுப்பியுள்ளனர். அவற்றில் சரியான விடையெழுதி குலுக்கல் முறையில் பரிசு பெறும் 3 அதிர்ஷ்டசாலிகள் விபரம் –

| | |
|---|---|
| 1) M. பூபதி,<br>B.F.A. Ist Year - Painting<br>Govt. College of Arts & Crafts<br>சென்னை – 3. | 2) பா. துரை பிரசன்னா,<br>42 / 4A, P.K.S. ஆறுமுக<br>நாடார் தெரு,<br>சிவகாசி – 626 123. |
| 3) K. ராஜா,<br>S/o. V. கருப்பண்ணன்,<br>11 வது கிராஸ், பெரியார் நகர்,<br>வெங்கமேடு, கரூர் - 639 006. | |



வெற்றி பெற்ற வாசகர்களுக்கு தலா ஒரு Milton insulated water bottle பரிசாக அனுப்பப்பட்டுள்ளது! Congrats.

சரியான விடை என்னவென்று பார்ப்போமா?

''லைப்ரரியில் புத்தகத்தால் முகத்தை மூடித் தூங்கிக் கொண்டிருப்பவனே திருடன்.

ஏனெனில் இன்ஸ்பெக்டர் டேஞ்சர் கிளப்புக்குள் நுழையும் போது அவன் முகத்தின் மீதுள்ள புத்தகம் நேராக உள்ளது. ஆனால் திருட்டு நடந்த பின்பு தலைகீழாக மாறியிருந்தது. லைப்ரரியில் இருந்த மற்ற இருவரும் அதே நிலையில் இருந்ததால், உறங்கிக் கொண்டிருப்பது போல நடிக்கும் ஆசாமியே திருடி அவசரத்தில் புத்தகத்தை மாற்றி வைத்து விட்டான் என்பதை டேஞ்சர் கண்டு பிடித்து விட்டார்!

40-ம் பக்கத்து தொடர்ச்சி....




உண்மைதான்!
ஆனுல் நீங்கள் அங்கே இருந்தால் எதிரிகளுக்கு சந்தேகமே எழாது!
அந்த இத்தாலியர்களின் குழு தலைவர் கார்லோவின் ஆலோசனையின்படி மின்னல் படை வீரர்கள் யாருமே பயன்படுத்தாத படுமோசமான சாலை வழியே பயணத்தை தொடர்ந்தனர்...
இது பாதுகாப்பான பாதைதானு?
நூற்றுக்கு நூறு பாது காப்பானது! இப்படியொரு தடம் இருப்பது ஜெர்மானி யர்களுக்குத் தெரியவே தெரியாது!
செடி கொடிகள் மண்டிக் கிடந்த ஓரிடத்தில் வாகனங்களை மறைவாக நிறுத்தி விட்டுப் போனார்கள்.
இருங்கள்.இனிநாம் கால் நடையாகவே டார் டெனுன் போய்ச் சேரு வோம்.. தூரம் அதிகம் இல்லை!
அவர்கள் டார்டெனுன் சென்றடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டது.. கார்லோ அவர்களை ஒரு வீட்டின் கொல்லைப்புற வழியாக உள்ளே அழைத்துச் சென்றார்.


இரண்டாவது மாடி ஜன்னலை திறந்து எதிரே தென்பட்ட ஒரு பெரிய கட்டிடத்தை கட்டிக் காட்டினுர் கார்லோ.
அதுதான் ஜெர்மானியர் களின் தலைமையக கட்டிடம்... காப்டன்!
ஜன்னலை மூடி கறுப்பு திரைச் சீலையை நன்றாக இழுத்து விட்ட பிறகே விளக்கை எரிய விட்டார் கார்லோ...
நாமிருக்கும் இந்த வீடு யாருடையது?
கீழ் தளத்தில் உள்ள ரெஸ் டாரண்டின் உரிமையாளர் மார்கோவுக்கு சொந்த மானது இந்தக் கட்டிடம்... இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் அவரை சந்திக்கலாம் -
அதே வேளையில் தன் வாடிக்கையாளரான ஒரு ஜெர்மனி அதிகாரிக்கு அவருக்கு மிகவும் பிடித்தமான உணவுப் பொருட்களை சப்ளை செய்து கொண்டிருந்தார் மார்கோ...
இன்னும் முதிர்ச்சியடை யாத வாத்து இது ஸார்.. கறி ஜோராக இருக்கும். அத்தோடு நீங்கள் விரும் பிக் கேட்ட மதுபானமும் கொண்டு வந்திருக் கிறேன்.
வெரிகுட்... மார்கோ! ஆனுலும் உனக்கு என் மீது ரொம்பவும்தான் அக் கறை! வழக்கம் போல் வாரக் கடைசியில் வந்து மொத்தமாக பணத்தை வாங்கிக் கொள்!
திரும்பி நடக்க யத்தனித்த மார்கோ ஏதோ சொல்ல மறந்து விட்டவன்போல் நின்று
நீங்கள் சொன்ன மாதிரி எப்போதும் காதை தீட்டி வைத்துக் கொண்டிருந்த தில், எதிரிகளின் அதிரடிப் படை ஒன்று இந்தப் பகுதி யினுள் ஊடுருவியிருப் பதான ஒரு வதந்தியை கேள்விப்பட்டேன்!
நிஜம்தானு நீ சொல்வது கொஞ்சம் விபரமாகத் தான் சொல்லேன்!



அதுதான் சொன்னேனே வதந்தி என்று... விபரங்களை இரகசியமாக சேகரித்து நிஜத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டு அப்புறமாக உங்களிடம் வருகிறேன்- என்னை முழுக்க முழுக்க நீங்கள் நம்பலாம்!
மார்கோ வெளியேறி தன் ரெஸ்டாரண்டை நோக்கி நடந்த போது ஒரு வயதான தம்பதியினர் வெறுப்பு உமிழும் பார்வையை அவன் மீது வீசினுர்கள்..
நய வஞ்சகன் - துரோகி!
மார்கோவை சந்திக்க ஆவலோடு காத்திருந்த மின்னல் படையினர் மாடிப்படியில் யாரோ ஏறி வரும் அரவம் கேட்டு பரபரப்படைந்தனர்.
வருவது - மார்கோதான்!
ஜெர்மானியர்களுக்கு எதிரான புரட்சிக் கும்பலின் கதாநாயகனை இப்போது நீங்கள் சந்திக்கிறீர்கள்.
இவ்வூர் மக்கள் என்னை துரோகி என்றெண்ணி தூற்றுகிறார்கள். ஜெர் மானியர்களும் நான் அவர்கள் கட்சி என்றே நம்பிக் கொண்டிருக் கிறார்கள்... ஆனுல் என் அருமை நண்பன் கார்லோவுக்கு மட்டுமே உண்மை தெரியும்!
இரகசிய புரட்சிப் படையின் தலைவனுஞ நான் ஜெர்மானியர் களுக்கு அவ்வப்போது அவ்வளவாக முக்கியத் துவம் இல்லாத, நான் சொல்லாவிட்டாலும் பின்னர் அவர்களாக கண்டுபிடித்து விடக் கூடிய மேலோட்டமான சில தகவல்களை மட்டுமே கொடுத்து வருகிறேன்!


இதைவிட பத்திரமான இடம் உங்களுக்கு வேறு எதுவும் இருக்க முடியாது காப்டன்.. இவ்வளவு அருகாமையில் பிரிட்டிஷ் வீரர்கள் இருப்பார்கள் என்று ஜெர்மானியர்கள் துளியும் சந்தேகம் கொள்ள மாட்டார்கள்.
அத்தோடு இங்கிருந்து சில குகைப் பாதைகள் உண்டு என்பதும் ஒரு சாதகமான அம்சம்!
மார்கோ கீழே இறங்கிச் சென்ற பின் மாத்யூஸ் சிந்தனையில் ஆழ்ந்தார்..
நேர் கீழே வெடி குண்டுகளை வைத்து எதிரிகளை ஒரேயடியாக நிர்மூலமாக்கி விடலாம்!
ஜெர்மானியர்களின் நிலைக்கு நேர் கீழே நீண்டு செல்லும் குகைப் பாதைகள்...! மிகப் பெரிய அளவிலான இறுதி தாக்குதல் தொடங்கும்போது இந்த வசதி நமக்கு ஒரு வரப்பிரசாதகமாக விளங்கப் போவது உறுதி!
மாத்யூஸை மற்றவர்கள் ஒரு விதமாகப் பார்த்தார்கள்...
அதைவிடச் சிறந்த வேறொரு யுக்தியை நான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.. இறுதி தாக்குதலின் போது ஜெர்மானிய தலைமையகத்தை நாம் வசப்படுத்திக் கொண்டு விட்டால் என்ன ஒரு அதிர்ஷ்டம் அது என்று எண்ணிப் பார்!
என்ன காப்டன்.. கனவு காண்கிறீர்களா?
தூக்கத்தில் உளறுகிறார் என்று நினைக்கிறேன்!
நடக்கிற காரியமா அது?
ஏன் நடக்காது? நம்மிடம் ஜெர்மானிய சீருடை இருக்கிறது... அத்தோடு போதிய ஆள்பலம் இருக்கிறது. ஜெர்மானியர்களின் இராணுவ அமைப்பை அழித்து தரை மட்டமாக்க நாம் அவர்களுடைய தலைமையகத்தை பன்னிரண்டு மணி நேரம் நம் ஆதிக்கத்தில் வைத்திருந்தாலே போதுமானது!


இதற்கிடையே, விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சில தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தது ஜெர்மன் இராணுவ மேலிடம்...
பிஸெர்டாவிலுள்ள எதிரி களின் தலைமையகத்தை அழித்து நிர்மூலமாக்க நாம் முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.. விமான படைப்பிரிவை தயார் செய்யுங்கள்...!
சுடும் குழுவின் முன் தான் நிறுத்தப்படும் நாளை எண்ணி கலங்கிக் கொண்டிருந்தான் 'நெமோ'
எப்படியும் சாகப் போகிறேன் - நான் ஏன் தப்பியோட ஒரு முயற்சியை மேற்கொள்ளக் கூடாது?
அன்றிரவு ஜெர்மானிய விமானப் படைப் பிரிவு ஒன்று தாழப் பறந்து வந்து மின்னல் வேகத்தில் குண்டுகளை பொழிந்துவிட்டுப் போனது..


ஜெர்மானியர்கள்தான் தாக்குகிறார்கள்..! அவர் களுடைய முயற்சி மட்டும் நல்ல பலனை தருமேயானால்..
திடீரென்று அந்த சிறைக் கட்டிடம் பலமாக அதிர்ந்தது -காதைப் பிளக்கும் பலத்த ஓசையை அடுத்து!
இரண்டாவதாக வந்து விழுந்த குண்டு சிறைக் கட்டிடத்தின் ஒரு பக்க சுவரை தரைமட்டமாக்கியது..
ஓ...! எனக்கு இப்படி யொரு அதிர்ஷ்டமா! இஷ்டத்திற்கு நான் வெளி யேறி ஓடிப் போய் விடலாம்!
எதிரே இருந்த தலைமையக கட்டிடம் படுமோசமாக சேதமடைந்திருந்தது. நெமோவின் மூளையில் ஒரு விபரீத எண்ணம் முளைவிட்டது..
அந்த கீழ் தளம்தான் 'திட்டமிடும் அறை'. அங்கே வரை படங்கள், கோப்புகள், திட்ட நகல்கள் ஏராளமாக இருக்கும்...
தெருக்களில் காயமடைந்து வீழ்ந்து கிடந்தவர்கள் தீனமாக முனகிக் கொண்டிருந்தனர்.. அங்கே பரவியிருந்த புகை மூட்டமும் நிலவிய குழப்பமும் சாதகமாக அமைய நெமோ தடுப்பார் யாருமின்றி முன்னேறிப் போய்க் கொண்டிருந்தான்...





திட்டக் குழுவில் சமீப நாட்கள் வரை அங்கத்தினனாக இருந்த நெமோவுக்கு முக்கியமான பதிவேடுகளை இனம் கண்டு கொள்வதில் சிரமம் இருக்க வில்லை..
ஆனால் - திடீரென்று புகை மூட்டத்திலிருந்து வெளிப் பட்டது ஓர் உருவம். அவர் வேறு யாருமில்லை.. சமீப காலம் வரை நெமோவின் சகாவாக திட்டக் குழுவிலிருந்த கர்னல் ஹண்டர்தான்...
யார் நீ...? இங்கே என்ன தான் செய்து கொண்டிருக் கிறாய்? நீ - பென்லேக்.. நெமோ அல்லவா?
சரேலென்று பாய்ந்து அதிரடியாக தாக்கினான் நெமோ..
ஆ..வ்வ்!
கும்!



ஜெர்மானிய தலைமையகத்தை சென்றடைய தனக்கு இருக்கும் ஒரே வழி என்னவென்று அவனுக்குத் தெரியும்.
எப்படியாவது ஒரு விமானத்தை நான் வசப் படுத்திக் கொள்ள வேண்டும்!
நகருக்கு கிழக்கே இருந்த விமான தளத்தில், அங்கே பிரச்னை ஏதும் வர வாய்ப்பில்லை என்ற காரணத்தால் மிகக் குறைவான பாதுகாப்பு ஏற்பாடுதான் இருந்தது..
அந்த விமானத்தை பய ணத்திற்கு தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இரு மெக்கானிக்குகள்.. வேறு யாரையும் அக்கம் பக்கத்தில் காணோம்.
படு மோசமாக காயமடைந்தவன் போல் தட்டுத் தடுமாறி நடந்து விமானத்தை நெருங்கினான் நெமோ...
அங்கே பாரேன்... அந்த ஆசாமியை
ஏய்... என்ன ஆயிற்று உனக்கு? எதிரிகள் குண்டு வீசியதில் மாட்டிக் கொண்டு விட்டாயா என்ன?
ஆம்புலன்ஸை அழைத்து வர ஓடினான் ஒருவன்... மற்றவன் காயத்தை ஆராயும் நல்ல எண்ணத்தோடு குனிந்தான். நயவஞ்சகனை நெமோ அவனுடைய தாடையில் இடியென ஒரு குத்துவிட்டான்.
கும்!
அஹ...!



மறுகணம் - விமானத்தின் பைலட் இருக்கையில் இருந்தான் நெமோ... மெள்ள ஓடி வேகம் பிடிக்கத் தொடங்கியது விமானம்.
ஏய்.. விமானத்தை நிறுத்து!
என்ன நடக்கிறது இங்கே?
மேலே ஏறத் தொடங்கிய விமானத்தை நோக்கி குண்டுகள் சரமாரியாக வந்தன... ஆனால் அந்த விமானம் அலட்டல் இன்றி தொடர்ந்து பறந்து சென்றது...
சபாஷ்டா.. பென்லேக்! இனி எவனும் உன்னை தடுத்து நிறுத்த முடியாது!


ஆனால் ஜெர்மானியர் வசமிருந்த நேப்பிள்ஸ் விமான தளத்தை அந்த விமானம் நெருங்கிய போது மறுபடியம் பிரச்னையாகிவிட்டது நெமோவுக்கு...
பிரிட்டிஷ் விமானம் -குண்டு வீசும் நோக்கத்தில் தாழப் பறந்து வருகிறது... சுட்டுத் தள்ளுங்கள்.


அடடே... தரையிறங்கும நோக்கத்தில் சக்கரங்களை கீழிறக்குகிறது.. சுடுவதை நிறுத்துங்கள்!


அதையடுத்து - தான் கவர்ந்து எடுத்து வந்த முக்கிய வரை படங்களையும், பதிவேடுகளையும் ஜெர்மானிய மேலதிகாரிகளிடம் ஒப்படைத்தான் நெமோ.
சாலர்னோவுக்கு அருகே இந்த பதினைந்து மைல் நீள கடற்கரை பகுதியில் எதிரிகள் பெரும் அளவில் ஊடுருவ திட்ட மிட்டிருக்கின்றனர்... அவர்களுடைய - படைபலம் பற்றிய சமீபத்திய புள்ளி விபரங்கள் - இதோ!


தங்களுக்கு இப்படி ஒரு குருட்டு அதிர்ஷ்டமா என்றெண்ணி வாயைப் பிளந்தனர் ஜெர்மன் இராணுவ மேலதிகாரிகள்.
ஏதோ என்னாலான சேவை - பாராட்டுகளுக்கு நன்றி ஸார்!
உன்னை எப்படி பாராட்டு வது என்றே தெரிய வில்லை நெமோ.. பிரிட்டிஷ், அமெரிக்க படைகளுக்கு சாவு மணி அடிக்க இந்த தகவல்கள் போதும்!
இரகசியமாக தங்களுடைய ரேடியோவில் செய்தி கேட்க குழுமியிருந்த இத்தாலி குடும்பங்களுக்கு பி.பி.ஸி. இன்ப அதிர்ச்சியாக சில தகவல்களை தந்தது...
யுத்தம் ஒரு முக்கிமான கட்டத்தை தொடங்கப் போகிறது. வெகு சீக்கிரமே அன்னியர்களின் ஆக்கிர மிப்பில்ருந்து நீங்கள் விடுதலை பெறப் போகிறீர்கள்.
கேட்டீர்களா! பெரும் அளவில் தாக்குதல் நடக்கப் போகிறது- நாஜிகளை துரத்தியடிக்கப் போகிறார்கள்!
தலைமையகத்தை பிடிப்பது என்று மின்னல் தீர்மானித்ததையடுத்து அந்த கட்டிடத்தின் மீது ர்ந்து தீவிர கவனம் செலுத்தப்பட்டது.. கண் பொறுப்பில் மிக் பால்ஸ்கி நின்றிருந்த பில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ர்களை கண்டு மிக் கறு சுறுப்படைந்தான்.
அது - அந்த சைத்தான் ஹோர்ஸ்ட் அல்லவா?


தன் உடன் பிறவா சகோதரன் ஒபோல்கா ஈனத்தனமான முறையில் கொல்லப்பட்ட காட்சி அவன் கண்ணெதிரே தோன்றி மறைந்தது...
ஹோர்ஸ்டை பழி வாங்குவதாக சபதமிட்டிருக்கிறேன். நான் ஏன் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?
சுற்றுப்புறத்தை ஆராய்ந்தான் மிக்...
ஊஹும்... இங்கிருந்து நான் சுட்டால் ஜெர்மானியர்களின் கவனம் இந்த வீட்டின் மீது திரும்பி விடும்.. அவனை பின் தொடர்ந்து செல்வேன்.. அதிரடியாக ஒரு தோட்டோவை அவன் நெஞ்சில் புதைத்துவிட்டால் போதும்!
கட்டிடத்தை விட்டு வெளியேறி ஹோர்ஸ்டை பின்னமர்ந்தான் மிக்.. கிராதகனை ஹோர்ஸ்டை கொல்ல நியாய அநியாயங்களைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவையில்லைதான் என்றாலும் பின்னாலிருந்து முதுகில் சுட மிக்கின் மனம் ஒப்பவில்லை.
ஹே...! கர்னல் ஹோர்ஸ்ட்..! உன்னை பழி தீர்க்க வந்திருக்கும் எமனை சற்றே திரும்பிப் பாரடா!
ஆனால் அவனுடைய துரதிர்ஷ்டம் அவனுக்கு நேர் மேலே மாடியில் ஒரு ஜெர்மானிய படைப்பிரிவு தங்கியிருந்தது.
அடப்பாவி... கர்னலை கொலை செய்ய முயற்சிக்கிறான்!


சரேலென்று அந்த ஜெர்மானிய கார்ப்பொரல் மிக் மீது பாய்ந்தான்...
மிக் எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டான்.
விடாதீர்கள் அவனை!
அவனை தலைமையகத்தினுள்ளே தள்ளிச் சென்றார்கள். கர்னல் ஹோர்ஸ்ட் கேள்விகள் கேட்கலானுன்...
மற்றவர்கள் எங்கே? அவர்கள் எல்லோரும் எங்கே பதுங்கிக் கிடக்கிறார்கள்?
மற்றவர்கள் என்றால்? - நீ கேட்பது எனக்குப் புரிய வில்லை!
மாத்யூஸின் மின்னல் படையில் ஒருவன் நீ - இல்லையா? இந்த ஜெர்மன் சீருடை உனக்கு எப்படி கிடைத்தது?
நீ பேசுவது எனக்கு விளங்கவில்லை!


விகாரமாக இளித்தான் கர்னல் ஹோர்ஸ்ட்...
எதிரிகளை பேச வைக்கும் யுக்தி எங்களுக்குத் தெரியும் - இவனை ஜெஸ்டபோவிடம் கொண்டு போங்கள்!
மிக்கை வெளியே தள்ளிக் கொண்டு போக அவனுடைய பிடரியில் கை வைத்தான் ஒரு வீரன்... அது தப்பாகிவிட்டது.
ஆ
பளிச்சென்று மிக் வாசலை நோக்கி ஓடிய கணத்தில் அடுத்தவன் துப்பாக்கியை உருவி எடுத்து குறி வைத்தான். ஆனால் அவனை தடுத்து நிறுத்தினான் கர்னல் ஹோர்ஸ்ட்
முட்டாளே - கொன்று விடாதே அவனை! அவன் நமக்கு உயிரோடு வேண்டும்!



அறையை விட்டு வெளியே பாய்ந்து மிக்கை அங்கிருந்த வீரர்கள் சூழ்ந்து கொண்டனர்...
சுவரில் மாட்டப்பட்டிருந்த வாள்களில் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டான் மிக்.
விலகிப் போங்கள்!
சரேல்!
ஆவ்..வ்!


ஆனல் மிக்கின் பாச்சா அதிக நேரம் பலிக்கவில்லை... அடித்து வீழ்த்தி அமுக்கிவிட்டார்கள்..
ஜெஸ்டபோ வசம் ஒப்படைக்கப்பட்டான் மிக் - இரகசிய நிலவறையினுள் அவன் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டான்...
உங்கள் திட்டம் என்ன? சொல்... உங்கள் திட்டம் என்ன?
இந்த சீருடை உனக்கு எங்கே கிடைத்தது? இந்த சீருடை உனக்கு எங்கே கிடைத்தது?
மிக் பால்ஸ்கிக்கு நேர்ந்த கதி என்ன என்று வெளியில் அறிந்த நபர் மார்கோ மட்டுமே...
கர்னல் ஹோர்ஸ்டை சுட்டுக் கொல்ல முயன்றான். பிடிபட்டு இப்போது ஜெஸ்டபோ கட்டிடத்தில் இருக்கிறான்.
முட்டாள்! ஹோர்ஸ்ட் மீது தனக்குள்ள தனிப்பட்ட வஞ்சத்தை அவன் மறந்து விட வேண்டும் என்று சொல்லியிருந்தேன். அவனிடமிருந்து உண்மைகளை எதிரிகள் கறந்து விட்டால் எல்லாமே நாசமாகிப் போய்விடுமே!
ஆனல் மிக் உயிரை விட்டாலும் விடுவானே தவிர வாயை திறக்க மாட்டான்...
அவனை நாம் நம்பலாம்!
ஜெஸ்டபோவை உங்களுக்கு தெரியாது. சித்திர வதைகளை மிக் தாக்குப் பிடித்து விடக்கூடும். ஆனல் அவர்கள் ஏற்றும் போதை மருந்துகள் ஒரு மனிதனின் சிந்தனை யோட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி மன
மயக்கத்தை விளைவிக்கக் கூடியவை. நம்மையறியாமலேயே உண்மைகளை உளறிக் கொட்டிவிடுவோம். எனவேதான் சொல்கிறேன் உடனடியாக நாம் மிக்கை அவர்கள் பிடியில் இருந்து மீட்க முயற்சிக்க வேண்டும் என்று.


ஒவ்வொரு நாளும் டாங்கி ஒன்று ஜெர்மானிய தலைமையக முகப்பில் கொண்டு வந்து நிறுத்தப்படுவதை மின்னல் படை வீரர்கள் ஏற்கனவே கவனித்திருந்தனர். இன்னும் வழக்கம்போல் அந்த டாங்கி வந்து நின்று கொண்டிருந்தது.
அநத டாங்கி மட்டும் நமக்கு இரவல் கிடைக்கு மேயானால் நினைத்ததை சாதித்து விடலாம்.
நீங்கள் என்ன நினைக்கி றீர்கள் என்று எனக்கும் புரிகிறது காப்டன்!
இருள் கவிழ்ந்ததும் நாம் காரியத்தில் இறங்கு வோம். ஒவ்வொரு தடவையும் ஜெர்மன் சீருடையில் நம்மை நாம்
வெளிப்படுத்திக் கொண்டால் அப்புறம் அந்தச் சீருடை நமக்கு பாதுகாப்பு கொடுக்காது! எனவே, இம்முறை கமாண்டோ சீருடை அணிந்து செல்வோம்!
இருட்டிய பின் சற்றைக் கெல்லாம் இருள் பகுதியிலிருந்து ஓர் அதிகாரக் குரல் ஜெர்மானிய மொழியில் சீறியது..
யாரங்கே பொறுப்பில் இருப்பது..! டாங்கி ஊழி யர்கள் உடனே இங்கே வரவேண்டும் - மிக அவசரம்!
தங்களுடைய மேலதிகாரிகளில் யாரோ ஒருவர் அழைப் பதாக எண்ணி சட்டென்று விறைப்பானார்கள் அந்த ஜெர்மானிய வீரர்கள்
நாம் ஏதாவது தவறு செய்து விட்டோமா?
தெரியவில்லை..! எதற் காக இந்த அழைப்போ -வாருங்கள் போய் தெரிந்து கொள்வோம்!


இருட்டில் மாத்யூஸை அவர்கள் இனம் கண்டு கொள்ள முடியவில்லை... நெருங்கி வந்த ஜெர்மானியர்கள் மீது மரங்களின் பின்னால் பதுங்கி நின்ற மின்னல் படை வீரர்கள் பாய்ந்தனர்...
அஹ்..!
மறுகணம் - அந்த டாங்கி அவர்கள் வசம் வந்துவிட்டது... மாத்யூஸ், ஜுல்ஸ், ஜேன் மற்றும் கிளார்க் அனைவரும் பாய்ந்து ஏறிக் கொண்டனர்.
கமான் ஜேன்... இதை ஓட்டிச் செல்லும் பொறுப்பை உன்னிடம் விடுகிறேன்!
தலைமையக வாசலில் நின்றிருந்த காவலாளிக்கு நிலவரம் புரிந்து அவன் துப்பாக்கியை உயர்த்துவதற்குள் டாங்கி விலகி உருளத் தொடங்கி விட்டது.
டுமீல்!


நேராக ஜெல்டபோ கட்டிடத்தை நோக்கி டாங்கியை செலுத்தினான் ஜேன். இத்தனையும் அதிரடியாக நடந்து விட்டதால் மற்றவர்களுக்கு எவ்வித சந்தேகமும் எழாது போயிற்று...
அதே வேளையில் - ஜெஸ்டபோவின் சித்திரவதை தாளாமல் மிக்கின் மூளை சிந்தனை சக்தியை இழந்து குழப்பத்தில் சிக்கி வசமிழந்து போயிருந்தது. ஆனாலும் சிறு இழையாக மனவுறுதி அவனுக்கு துணை நின்று காத்தது..
மாத்யூலின் பட்டாளம் ஏதோ திட்டம் வைத்திருப் பதாக ஏற்கனவே நீ சொல்லிவிட்டாய்.. அது என்ன திட்டம்? ம்ம்.. வாயை திறந்து சொல்லடா... அற்ப புழுவே
ஆமாம்... ஒரு திட்டம் உண்டு.. உங்களை அதிரடியாக வந்து தோற்கடிக்கும்.. ஆனால் அது என்னவென்று உங்களால் யூகிக்கவே முடியாது... ஒருக் காலும் முடியாது!
சரியான கல்லுளி மங்கன்..! ஓ.கே.. டாக்டர் இனி இவனை உங்கள் வசம் ஒப்படைக்கிறேன்.. மருந்தை ஏற்றுங்கள்.


வெளியே - அந்தக் கட்டிடத்தை நெருங்கி விட்டிருந்தது ஜேன் ஓட்டி வந்த டாங்கி... உச்ச வேகத்தில் தொடர்ந்து ஓடிஞன் ஜேன்...
அந்த டிரைவருக்கு மறை கழன்று விட்டதா என்ன?
அருகில் இருந்த காவல் அறையிலிருந்து ஆட்கள் ஓடி வந்தனர்... டாங்கியிலிருந்து பீரங்கி அவர்களை வீழ்த்தியது...
க்ராஷ்!
ஆஆஆ...
அந்தக் கட்டிடத்தில் சித்திரவதை கூடம் குறிப்பாக எந்த இடத்தில் உள்ளது என்று மார்கோ விளக்கிச் சொல்லி யிருந்தான்... செங்கற்களும், பூச்சும் மடமடவென்று சரிய தொடர்ந்து முன்னேறினான் ஜேன்.. முடிவில் -


ஜெஸ்டபோ இருவரும் துப்பாக்கியை முழக்கியவாறு தோற்று விழுந்தனர்...
டுமீல்!
டுமீல்!
மாத்யூஸ் டாங்கியிலிருந்து வெளியே பாய்ந்தோடி வந்தார்.
மிக்.. பயப்படாதே -விரைவிலேயே குண மடைந்து விடுவாய்!
அப்போது மிக் அரை மயக்க நிலையில் இருந்தான்..


வந்த வேலை முடிந்துவிட்டது... ஆனல் டாங்கியை பின்னோக்கி செலுத்தாமல் தொடர்ந்து மேலே செலுத்திக் கொண்டு போனுன் ஜேன்...
சபாஷ் ஜேன்! ஒரு பிரள யமே நடத்திவிட்டாய்!
கட்டிடத்திற்கு வெளியே எதிர்ப்பட்ட வேறொரு டாங்கி அவர்களுடைய வழியை மறிக்க முயன்று தோற்றது...
பூம்!
பின்னர் நகரின் தென் பகுதியிலிருந்த காட்டுப் பகுதியை நோக்கி டாங்கியை செலுத்தினான் ஜேன். டாங்கியை காட்டின் முகப்பில் விட்டுவிட்டு, கால் நடையாகவே நடந்து மறைந்து போனார்கள் - கானகத்தினூடே!
மிக்... உன்னால் நடக்க முடியுமா? - ஜுல்ஸ் நீயும் கொஞ்சம் தாங்கிப் பிடி!
சுற்றி வளைத்து ஒரு வழியாக மார்கோவின் வீட்டை திரும்பவும் வந்தடைந்தது அந்தக் குழு....


இதற்கிடையே, வடக்கு ஆப்பிரிக்காவிலும், சிஸிலியிலும் நிலை கொண்டிருந்த பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க துருப்புகள் பெரிய அளவிலான தாக்குதலுக்கு தங்களை தயார் படுத்திக் கொண்டிருந்தன...
பிரிட்டிஷார் வட பகுதியிலும், அமெரிக்கர்கள் தென்பகுதியிலும் முனைப்பாக தாக்குவார்கள்.. திட்டத்தை செயல் படுத்த நான்கு தினங்களுக்குள் நேப்பிள்ஸ் துறைமுகத்தை அவர்கள் கைப்பற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது.
ஜெர்மானிய சீருடைக்கு மாறிக் கொண்ட நெமோ டார்டேனிலிருந்த ஜெர்மானிய உளவுத் துறையினருக்கு இங்கிலாந்தினர் எங்கே ஊடுருவி எப்படி முன்னேற திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற விபரங்களை கொடுத்துக் கொண்டிருந்தான்...
அதையடுத்து அந்த ஜெர்மானிய தலைமையகத்திலிருந்து மளமளவென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன...
கவச வாகனப் பிரிவு உடனடியாக தெற்கு நோக்கி நகரட்டும்.. ட்ரெட்டோவ் தன்னுடைய யுத்த விமானங்களை ரோமிலிருந்து கொண்டு வரும் போது உதவிக்கு குறைந்தது மூன்று கவச வாகனப் பிரிவுகளாவது
அங்கே நிலை கொண்டிருக்க வேண்டியது அவசியம்.
பிறர் கவனத்தை ஈர்க்காத வண்ணம் தன் கடமையிலேயே கண்ணாக இருப்பதுபோல் போக்குக் காட்டிக் கொண்டு நடமாடி வந்த மார்கோ நிலவரத்தின் போக்கை ஓரளவு யூகித்துவிட்டான்...
படு உற்சாகமாக இருக்கிறார்கள்... நிலவரம் இவர்களுக்கு சாதகமாகி வருகிறது போலும்.



பின்னர் மாத்யூஸிடம் வந்தான் மார்கோ...
நேச நாட்டுப் படைகள் ஏற்கனவே கடலில் வந்து கொண்டிருப்பதாகவும், அவர்களுடைய கதியை பற்றி கிண்டலாக பேசிக் கொண்டு உற்சாகமாக திரிகிறார்கள் ஜெர்மானியர்கள்.
நாமும் தாக்குதலுக்கு தயாராக வேண்டும்... ஆனால் எப்போது என்று துல்லியமாக கணிக்க வேண்டும்
உள்ளூர் மருத்துவமனைக்கு வாடிக்கையாக காய்கறி சப்ளை செய்துவந்த மார்கோ, அங்கிருந்த ஒரு சிப்பந்தியோடு ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பினான்..
இன்றிரவு சிலிண்டர்களை தோட்டத்தில் பதுக்கி வைக்கிறேன். ஜெர்மானியர்கள் யாரும் தெரிந்து கொள்ளவே முடியாது..
மின்னல் படையினர் ஜெர்மானிய சீருடைகளை அணிந்து கொண்டு தாக்குதலுக்கான முதல் சமிக்ஞையை எதிர் நோக்கி காத்திருக்கையில் கடல் பகுதியிலிருந்து பீரங்கி முழக்கம் தொடராக கேட்கத் தொடங்கியது...
ஆரம்பமாகிவிட்டது...! அடுத்து நாம் ஜெர்மானிய தலைமையகத்தில் நம் கைவரிசையை காட்டத் தொடங்க வேண்டும்..
ஒரு மணி நேரம் கழித்து, கார் ஒன்று வந்து நிற்க மேலதிகாரிகள் சிலர் அதை விட்டிறங்கி ராக உள்ளே சென்றார்கள்.
சிலிண்டர்களை குகைப் பாதையினுள் தயாராக நிறுத்தி வைத்திருக்கிறேன் - உங்களுக்காக!


குகைப்பாதையினுள் அவர்களை மார்கோ வழி நடத்திச் சென்றான்... பல் வைத்தியர்கள் பயன்படுத்தும் ஆழ்ந்த மயக்கம் தரும் வாயு நிரம்பிய அந்த சிலிண்டர்களை ஜுல்ஸும், கிளார்க்கும் தூக்கிக் கொண்டு முன்னேறினார்கள்.
குகைப் பாதையின் முடிவில் இருள் படர்ந்திருந்த ஓர் அறை இருந்தது... அங்கிருந்து ஓர் குறுகலான பாதை வழியாக கொஞ்ச தூரம் சென்ற பின் -
மாநாட்டு அறையின் பின் பக்கம் இது.. அதோ காற்று போகும் வென்டிலேட்டர்...! இந்தப் பக்கம் பொதுவாக யாருமே வருவதில்லை..!
சற்றைக் கெல்லாம் அந்த நிறமற்ற, மணமற்ற மயக்க வாயுவை அறையினுள் பீச்சத் தொடங்கினார்கள் மின்னல் படையினர்.
இது பாதிப்பை ஏற் படுத்தும் வரை யாருக்கும் சந்தேகம் எழாது...!
உள்ளே - ஜெனரலும் மற்ற அதிகாரிகளும் சோர்வும், அயர்ச்சியும் தங்களை போட்டு அமுக்குவதாக உணர்ந்தார்கள்...
நேற்றிரவு நன்றாகத் தானே தூங்கினேன்.. ஏன் இப்படி ஒரேயடியாக அசத்துகிறது?
அங்கே பார்.. ஜெனரலே தூங்கி வழிகிறார்!


மாத்யூஸும் மற்றவர்களும் கவச முகமூடியை அணிந்து கொண்டு உள்ளே புகுந்தனர்... ஜெர்மானிய அதிகாரிகள் அனைவரும் சுயவுணர்விழந்து கிடந்தனர்..
அங்கிருந்த ஒரு நபரை எதிர்பாராதவிதமாக அடையாளம் கண்டு கொண்டு விட்டார் மாத்யூஸ்..
இவனை எனக்குத் தெரியும்! விஸெர்டாவில் நான் இருந்தபோது திட்டக் குழுவில் இவன் ஒருவனுக இருந்தான். அப்படி யானுல் - இவன்தான் அவர்கள் பேசிக் கொண்ட நெமோவா?
திட்டம் பலிக்க முடிந்தவரை அதிக பட்ச மின்னல் வீரர்கள் ஜெர்மானிய மேலதிகாரிகளாக நாடகமாட வேண்டிய அவசியம் இருந்தது. அதுவரை மாத்யூஸ் மட்டுமே ஒரு அதிகாரிக்குரிய சீருடையில் இருந்தார்... அந்த நிலைமையை இப்போது மாற்றி விட்டார்கள்.
யார் என்ன பதவிக்குரிய உடையணிந் திருக் கிறோம் என்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!
கான்பரன்ஸ் அறைக்கு வெளியே காவல் நின்ற சிப்பாய் மேலதிகாரிகள் வெளியேறி வருவதை கண்டதும் விறைப்பாக நிற்கலானான்...
மறுகணம்...
மடேர்!
வழியில் எதிர்ப்பட்ட காவலாளிகளை எல்லாம் அடித்து வீழ்த்தி விட்டு தலைமையகத்தின் தகவல் தொடர்பு மையத்தை நோக்கி முன்னேறினார்கள்.





தகவல் தொடர்பு மையத்தில் .
டார்டெனேனிலிருக்கும் தலைமையகத்திலிருந்து பேசுகிறேன் அங்கே ஐந்தாவது படைப் பிரிவு தலைமையகமா..? உங்களுக்கு ஒரு செய்தி வரவிருக்கிறது..
கொஞ்சம் பொறு... தொடர்பு கொள்கிறேன்.
மின்னல் படையினர் மீண்டும் தங்கள் கைவரிசையைக் காட்டினார்கள்...
கும்!
கும்!
ஜூல்ஸும். கிளார்க்கும் ஆபரேட்டர்களின் வாயில் துணியைத் திணித்து கட்டிப் போட்ட வேளையில், மாத்யூஸ் சிக்னல் - குறியீட்டு புத்தகத்தை தேடி எடுத்தார்.
அதிகார பூர்வமான சிக்னல் - குறியீட்டை நாம் இப்போது பயன் படுத்தலாம்.. செய்தியை பெறும் ஜெனரல்களுக்கு துளி சந்தேகமும் எழாது!
மேலிடத்து உத்தரவு இது - கேள்வி கேட்காமல் நிறை வேற்றவும்! உங்களு டைய படைப்பிரிவை பான்டேகார்வினேவுக்கு நகர்த்தவும்... - உடனடியாக!
போர்க் கள முகப்பில் துருப்புகளை நடத்திச் சென்று கொண்டிருந்த ஜெர்மன் கமாண்டர்களுக்கு கன்னா பின்னா வென்று உத்தரவுகள் போய்ச் சேர்ந்தன..


கடற்படையும், விமானப் படையும் பாதுகாப்பு கொடுக்க பெருவாரியான நேசநாட்டு படைவீரர்களை ஏற்றிக் கொண்டு போர் படகுகள் எதிர்கரை நோக்கி விரைந்தன - இறுதி ஆக்கிரமிப்பு தாக்குதலை பிரம்மாண்டமான அளவில் நடத்தும் உத்தேசத்தோடு!
கரையேறிய பின் ஜெர்மானியர்களின் எதிர் தாக்குதலால் பலத்த சேதம் ஏற்பட்ட போதிலும் தொடர்ந்து முன்னேறியது நேச நாட்டுப் படை...
எதிர்த்து தாக்கி வந்த ஜெர்மானிய படை சட்டென்று பின் வாங்கி ஓய்ந்து போனது - ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி! நிலைமையை உன்னிப்பாக கவனித்து வந்த 20ம் எண் பீரங்கிப் படைப் பிரிவின் கமாண்டர் வான் வீஸருக்கு ஏகப்பட்ட சந்தோஷம்.
நாம் எதிர்பார்த்த மாதிரியே எதிரிகள் நம் சூழ்ச்சி வலையினுள் வந்து விழப் போகிறார்கள்.. அடுத்து நாம் தாக்க தொடங்கினால் எதிரிகளின் படை உருத் தெரியாமல் சின்னா பின்னமாகி விடும்.



அப்போதுதான் எதிர்பாராத வகையில் வந்து சேர்ந்தது அந்த விநோதமான உத்தரவு...
டார்டெனேன் தலைமை யகத்திலிருந்து 20ம் எண் பீரங்கிப் படை கமாண்டருக்கு - உங்களுடைய படைப்பிரிவை உடனே இப்போதுள்ள நிலையிலிருந்து விலக்கி பான்டே கார்விஞேக்கு வடக்கே யுள்ள பள்ளத்தாக்கை நோக்கி நகர்த்திச் செல்லவும்.
உங்கள் உத்தரவை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பிரிட்டிஷாரை நான் சுலபமாக மண்டியிடச் செய்துவிடக் கூடிய இந்தத் தருணத்தில் இப்படியொரு உத்தரவு அர்த்தமற்றது... விவேகமில்லாதது...
ஆனால் இதற்கெல்லாம் மூல காரணமான மாத்யூஸ் தன் சூழ்ச்சி பலித்து வருவதை எண்ணி மகிழ்ச்சியடைந்தார்.
மேலிடத்து உத்தரவு இது - ஜெனரல்! உங்களுக்கு ஏதாவது மனக் குறை இருந்தால் எழுத்து மூலமாக மேலிடத்துக்கு தெரிவிக்கலாம்!
பொங்கி வந்த வெறுப்பையும், கோபத்தையும் வெளியே காட்ட முடியாத ஆத்திரத்தோடு பான்டே கார்விஞே நோக்கி நகருமாறு தன் டாங்கிப் படைக்கு உத்தரவிட்டார் வான் வீஸர்.
மேலிடத்தார் என்ன செய்கிறோம் என்று தெரிந்து தான் செய்கிறார்களா... இது என்ன வகை யுத்த தந்திரமோ தெரியவில்லை. அல்லது அவர்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக புத்தி பேதலித்துப் போயிருக்க வேண்டும்..



அதே வேளையில் பலவீனமான அமெரிக்க படை மீது முனைப்பான தாக்குதல் நடத்தி கை ஓங்கி வந்த வேறொரு படைப்பிரிவு கமாண்டருக்கு உடனடியாக தாக்குதலை நிறுத்திவிட்டு பின் வாங்குமாறு உத்தரவு வந்து சேர்ந்தது...
நாசமாகப் போயிற்று! தலைமையகத்தில் இருப் பவர்களுக்கு திடீரென்று சித்த சுவாதீனம் இல்லாது போய்விட்டதா என்ன? எதிரிகளை சின்னா பின்ன மாக்கி வெற்றி ஈட்டி வரும் வேளையில் இப்படியொரு உத்தரவு.. ஹூம் - மேலிடத்து உத்தரவு.. நான் என்ன செய்ய முடியும் - கீழ்படிவதை தவிர!
ஆனுல் அதிரடிபடை ஒன்றுக்கு தலைமை தாங்கி நடத்திச் சென்ற கர்னல் ஹோர்ஸ்ட்டுக்கு அடுத்தடுத்து குளறுபடி யான உத்தரவுகள் வந்து சேரவே, நெஞ்சில் சந்தேகம் துளிர் விட்டது...
அர்த்தமற்ற உத்தரவுகள்.. அங்கே என்னதான் நடக் கிறதோ தெரியவில்லை.. தலைமையகத்துக்கு நேரி லேயே போய் பார்த்து விடலாம்!
SS-52315
இதற்கிடையே மயக்க வாயுவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நெமோ சிலிர்த்தெழுந்தான்...
நான் எப்படியாவது இங் கிருந்து தப்பியோடிப் போய்விட வேண்டும்.
மிகுந்த பிரயாசையின் பேரில் தன் கை கட்டுக்களை அவிழ்த்துக் கொண்ட நெமோ மளமளவென்று மற்ற தடைகளையும் களைந்தான்.


ஹேய்.. நில்!
தன்னருகே விழுந்து கிடந்த இன்னொரு அதிகாரியை அவன் கட்டவிழ்த்து விடுவிக்க முயன்ற போது அங்கே கதவை திறந்து கொண்டு மின்னல் படை வீரன் ஒருவன் நுழையவே புலிப் பாய்ச்சலாக ஜன்னல் வழியாக வெளியே பாய்ந்தோடினான் நெமோ
நிற்க அவனுக்கென்ன பைத்தியமா?
உடனே செய்தி மாத்யூஸை எட்டியது...
அப்படியா? நம் திட்டம் தவிடு பொடியாகி விடுமே! நம் நாடகம் அம்பலமாகிவிடும் அபாயம் ஏற்பட்டிருக் கிறது.. நாம் விரைந்து செயல்பட வேண்டும்!


இதற்கிடையே, எதிரிகளிடையே நிலவும் குழப்பமும் அவர்களுடைய அர்த்தமற்ற நடவடிக்கைகளும் கடற்கரை பகுதியிலிருந்த நேசநாட்டுப் படைத் தலைமைக்கு தெரிய வந்தது...
இந்த சூழலில் ஏற்கனவே குழம்பிப் போயிருக்கிற ஜெர்மானியர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி பலவீனமடையச் செய்ய நம் பீரங்கிப் படை ஒன்றை நேராக டார் டெனேனை நோக்கி செலுத்திச் செல்வோம்!
நெமோவின் கண்ணில் பட்ட முதல் ஜெர்மானிய அதிகாரி கர்னல் ஹோர்ஸ்ட்தான்..
என்ன... நீ சொல்வதெல்லாம் நிஜம்தானா? இத்தனை குழப்பத்துக்கும் அதுதான் காரணம் போலும். உடனடியாக தலைமையகத்தை நாம் மீட்டாக வேண்டும்!
ஹோர்ஸ்டின் காரிலேயே நெமோவும் தொற்றிக் கொண்டான். தலைமையகத்தை நோக்கி விரைந்தது அந்தக் குழு..


தலைமையக கட்டிடத்தை நெருங்குவது அப்படியொன்றும் சுலபமான காரியமாக இருக்கவில்லை. மின்னல் படை வீரர்கள் ஏகப்பட்ட தடைகளை ஏற்பாடு செய்திருந்ததோடு ஹோர்ஸ்ட் குழுவினரை வரவேற்க குண்டுகளையும், தோட்டாக்களையும் தாராளமாக தெளித்தனர்.


ஜெர்மானியர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்ததால் மின்னல் படையினரின் கை ஓங்கியே இருந்தது...
அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் அதற்குரிய விலையை கொடுக்கச் செய்யுங்கள்!


ஜூல்ஸுக்கு இப்படிப்பட்ட கைகலப்பு என்றால் ரொம்ப இஷ்டம். அவன் வசமிருந்த துப்பாக்கி காலியானவுடன் அதைத் தூக்கி எறிந்துவிட்டு நாஜிகளின் கட்சிக் கொடி கம்பத்தை தூக்கி இஷ்டத்துக்கு எதிரிகளை நோக்கி விளாசினான்...
வாங்கடா... ஒவ்வொருத் தனு வாங்கடா...!
இதற்கிடையே முழுமையாக நலமடைந்துவிட்ட மிக் வெறி பிடித்தவன் போல் ஆவேசத்தோடு எதிரிகளை துவம்ஸம் செய்து கொண்டிருந்தான்.
கொலைகார நாஜிகளே -செத்து மடியுங்கள்!
அப்படியொரு குழப்பமான சூழலில் எல்லோருமே நெருக் கடியான விநாடிகளை சமாளிக்க வேண்டியிருந்தது. மாத்யூ ஸும் அதற்கு விதிவிலக்கல்ல... அவர் காலியாகிப் போன தன் துப்பாக்கியில் மீண்டும் தோட்டாக்களை நிரப்பிக் கொண்டிருந்த விநாடியில் நெமோவின் கைத் துப்பாக்கி அவருடைய நெஞ்சைக் குறி வைத்து நிமிர்ந்தது.


செயல் வேகத்தில் ஈடிணையற்ற மாத்யூஸ் சட்டென்று தன் காலி துப்பாக்கியை நெமோவின் மூஞ்சியில் எறிந்துவிட்டு அதே வேகத்தில் புலியென அவன் மீது பாய்ந்தார்.
அவனை அவர் சுவரோடு சுவராக வைத்து அழுத்தி உண்டு இல்லை என்று வதம் பண்ணிக் கொண்டிருக்கையில் அங்கே வந்து சேர்ந்தான் கர்னல் ஹோர்ஸ்ட்..
அடப்பாவி.. இவன் மாத்யூஸ் அல்லவா? இவனைத்தானே நான் இத்தனை காலமும் தேடிக் கொண்டிருந்தேன்.
மாத்யூஸை குறி வைத்து துப்பாக்கி விசையை இழுக்க ஹோர்ஸ்ட் யத்தனிப்பதை கண்டான் மிக்...
டுமீல்!
அ..ம்..மா!
ஒபோல்கா உள்ளிட்ட போலந்து இளைஞர்களின் அகால கோர மரணத்திற்கு பழி வாங்கப்பட்டுவிட்டது!


கைகலப்பில் நிபுணரான மாத்யூஸ் நெமோவை பின்னி எடுத்துவிட்டார்.
நிலை குலைந்து கீழே சரிந்த நெமோ தரையில் கிடந்த கல்லில் பலமாக மோதிக் கொண்டதால் மயக்க மடைந்தான்.
இவன் செய்திருக்கும் அக்கிரமங்களுக்கு சாவுதான் சரியான தண்டனையாக இருக்க முடியும். என்றாலும் அந்தப் பொறுப்பை நான் இராணுவ கோர்ட்டாரிடம் விட்டு விடப் போகிறேன்..
அதே விநாடியில் - மாத்யூஸ் பயந்து கொண்டிருந்த மாதிரியே வெளியே சாலையில் டாங்கிகள் விரைந்து வரும் ஓசை தெளிவாக கேட்டது...
ஓ... ஜெர்மானியர்கள் வந்து விட்டார்கள் - நான் எதிர் பார்த்ததுதான்.. சமாளிக்க வேண்டும்!


ஆனால் வந்தது ஜெர்மானியர்கள் அல்ல - அமெரிக்க பீரங்கிப் படை!
மின்னல் படை வீரர்கள் ஜெர்மானிய சீருடையில் இருந்த தால் வந்த அமெரிக்கர்கள் தப்பாக புரிந்து கொண்டு தாக்க முற்பட்டனர்...
சுடாதீர்கள்! நாங்கள் எதிரிகள் அல்ல! மாத்யூஸின் 'மின்னல் படை' வீரர்கள்!
சுடுவதை நிறுத்துங்கள்- உடனடியாக!
நடந்ததை மாத்யூஸ் விவரித்தபோது அதை நம்பமாட்டாத வராக அந்த அமெரிக்க பீரங்கிப் படை கமாண்டர் பேச்சிழந்து நின்றார்...
உங்களுடைய பெருமையை நிறையவே கேள்விப்பட்டி ருக்கிறேன்... அட்டகாசம் பண்ணிவிட்டீர்கள்.. எதிரிகள் சின்னா பின்ன மாகிப் போய் வெற்றி நம்முடையதாகி வருகிறது... நன்றி உங்களுக்குத்தான்!


முகமில்லா
மாயாவி!